விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 09 புதன்கிழமை (25.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 249

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## பிரபாகரன் மறைந்திருந்த இடத்தை கண்டுபிடிக்க முடிந்தது எவ்வாறு?

### மேற்கோள் காட்டுகிறது சிங்கள இணையம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணத்திற்கு தனது எதிரணியினரான கஸ்ரோ குழுவினரே காரணம் என கே.பி.என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் கூறிய போதிலும் கே.பியின் அறிவிப்பொன்றின் மூலமே பிரபாகரன் மறைந்திருந்த இடத்தை கண்டு பிடிக்க முடிந்ததாக இராணுவத்தின் உயர் மட்டத் தரப்பு தகவல்களை மேற்கோள்காட்டி சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் (18ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது நீதிமன்றின் விசாரணைகள் நிறைவில்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான ஊழல் மோசடி குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தில் நிறைவடைந்து வருவதாகவும் இன்னும் இரண்டு நாட்கள் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர் தீர்ப்பு அறிவிக்கப்படும் என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உதய மெதவெல தெரிவித்துள்ளார்.

வழக்கின் (18ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரனுக்கு எப்பொழுதுமே ஆலோசனை கூறியது கிடையாது!

## வைகோ நேற்று அறிக்கை



(சென்னை)

பிரபாகரனுக்கு எந்தக் காலத்திலும் நாங்கள் யோசனை கூறியது கிடையாது என ம.தி.மு.க.பொதுச்செயலாளர் வைகோ விளக்கம் அளித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

### யுத்தக் குற்றச்சாட்டை முறியடிக்க

## ஐ.நாவுக்கான பிரதித் தூதுவராக சவிந்திர சில்வா பதவியேற்கிறார்

(கொழும்பு)

ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதித் தூதுவராக மேஜர் ஜெனரல் சவிந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். அவர் விரைவில் இப் பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்வார்.

இதுவரை காலமும் பிரதித் தூதுவராக அங்கு கடமையாற்றிய பந்துல ஜயசேகரவின் இடத்துக்கே இவர் நியமிக்கப்படுகிறார். இலங்கையில் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றன என்று கூறப்படும் யுத்தக் குற்றச்சாட்டுக்களை ஐ.நா. சபையில் இம் மேஜர் ஜெனரல் முறியடிப்பார் என்று வெளிவிவகார அமைச்சு நம்புகின்றது.

வெள்ளைக் (18ஆம் பக்கம் பார்க்க)

## சந்நிதியில் நேற்று 12 சங்கிலிகள் அறுப்பு

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய தீர்த்தத் திருவிழாவில் நேற்று 12 தங்கச் சங்கிலிகள் களவு போயுள்ளன.

தீர்த்தத்திருவிழாவில் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டிருந்த நிலையில் இத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

இது குறித்து உற்சவகாலப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. இதேவேளை நேற்று முன்தினம் இரவு நான்கு சங்கிலிகள் அறுக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மட்டும் 17 சங்கிலிகளும் ஒரு தாலிக் கொடியும் அறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

## தமிழக கேந்திர நிலையங்களை குறிவைத்து இலங்கையில் அமெரிக்காவின் ராடர்கள்?

(சென்னை)

தமிழகத்தில் உள்ள முக்கிய பாதுகாப்பு கேந்திரங்களை குறிவைத்து இலங்கையில் அமெரிக்க ராடர் அமைக்கப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகி உள்ளது.

கொழும்பு இரத்மலானை விமானப்படை தளத்தில் அமெரிக்கா தனது செலவில் நவீன ராடர் கருவி ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது.

சுமார் 6 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்த நவீனரக ராடர், செயம்மதியூடாக, தொலைத் தொடர்புகளையும், தரவுகளின் பரிமாற்றங்களையும், துல்லியமாக அறியும் திறன் கொண்டது எனக் கூறப்படுகிறது.

பீச் கிராப் என அழைக்கப்படும், ஆளில்லா வேவு விமானங்களையும் அவதானித்து இதனூடாக கட்டுப்படுத்த முடியும் என அமெரிக்க தொழில் நுட்பவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நவீன ரக ராடர் மூலம் கடல் கண்காணிப்பிலும் ஈடுபடலாம் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ள நிலையில், இது குறித்து இந்தியா மற்றும் சீனா எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை.

இருப்பினும் அமெரிக்காவின் இந்தி அதி நவீன ராடர்கள், (18ஆம் பக்கம் பார்க்க)


## மட்டு. மாநகர சபை உறுப்பினரை காணவில்லை என முறைப்பாடு

(மட்டக்களப்பு)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினரும் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினருமான கில்லி என்றழைக்கப்படும் பிரகாசம் சகாயமணி நேற்று முன்தினமுதல் காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி சகாயமணி மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தமது மாநகர சபை உறுப்பினர் காணாமல் போயுள்ளமை குறித்து மாநகர சபை மேயரும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன் கிழக்குமாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தனின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளார்.

காளிகோயில் வீதி புன்னைச்சோலையைச் சேர்ந்த சகாயமணி நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 6.15 மணியளவில் மாநகர மேயர் சிவகீதா பிரபாகரனை அவரது வீட்டில் சந்தித்துவிட்டு ஆசீர்வாதம் என்ற மாநகர உறுப் (18ஆம் பக்கம் பார்க்க)



நல்லூர்க் கந்தனின் மஞ்சப் பவனித் திருக்காட்சி...

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## உதைபந்தாட்ட போட்டி

மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் அழைக்கப்பட்ட யாழ் மாவட்ட முன்னணிக் கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு, அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து. இளவாலை, யங்ஹென்றீஸ் அணியும் மற்றுமொரு போட்டியில் பிற்பகல் 4.30 மணிக்கு நாவாந்துறை கலைவாணி அணியை எதிர்த்து சக்கோட்டை சென் சேவியர் அணி மோதவுள்ளன.

நேற்று நடைபெற இருந்த போட்டிகளான, நவிண்டில் கலை மதி அணியும் மற்றுமொரு போட்டியான ஊரெழு றோயல் அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் அணிகளுக்கிடையிலான, போட்டியும் மழை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பெண்ணின் தங்க நகைகள் பஸ்ஸில் திருட்டு

## 2 1/2 இலட்சம் ரூபாய் பெறுமதி என மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றில் பயணித்த பெண் ஒருவரிடமிருந்து இரண்டரை இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் மற்றும் ஆவணங்கள் என்பன திருடப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மேலும் 15 ஆயிரம் ரூபாய் பணமும் முக்கிய ஆவணங்கள் பலவும் களவாடப்பட்டிருக்கின்றன.

நகைகள், பணம் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் அடங்கியிருந்த கைப்பையே திருடப்பட்டுள்ளது.

கணவனால் கைவிடப்பட்ட இரண்டுபிள்ளைகளின் தாயான செல்வேந்திரன் இந்திராணி (வயது-41) என்பவரிடமிருந்தே இவை அபகரிக்கப்பட்டிருக்கின்றது.

கற்கோவளம் கிராம சேவையாளர் பிரிவில் வசித்து வரும் இவர், வவுனியாவிலிருந்து வந்து கொடிகாமத்தில் இறங்கிய பின்னரே தனது நகைகள், பணம் மற்றும் ஆவணங்கள் அடங்கிய கைப்பை காணாமல் போயுள்ளதாக உணர்ந்தார்.

தனது இரு பிள்ளைகளுடன் வவுனியாவிலிருந்து பஸ்ஸில் ஏறிய இவர் பஸ்ஸில் இடமில்லாததாலே பஸ்ஸின் கீழ்த் தட்டில் அமர்ந்திருந்தவாறே பயணித்தார்.

உடுப்புகள் மற்றும் ஆவணங்கள் அடங்கிய பைகளையும் தன்னுடனேயே வைத்திருந்ததாகவும் கூறினார். கற்கோவளத்திற்குச் செல்வதற்காக கொடிகாமத்தில் இறங்கிய பின்னர் கைப்பை காணாமல் போனமை தெரிய வந்ததால் உடனடியாக பிறிதொரு பஸ்ஸில் ஏறி யாழ்.நகர் நோக்கிச் சென்றபோது மாலை 7 மணியாகியிருந்தமையால் குறிப்பிட்ட பஸ்ஸை அங்கு காணவில்லை என்றும் அந்தப் பெண்மணி தெரிவித்தார்.

இவருடைய கைப்பையில் 5 1/4 பவுண் நிறையுடைய தாலிக்கொடி, 2 பவுண் நிறையுடைய காப்புகள், 1 1/2 பவுண் நிறையுடைய சங்கிலி என்பவற்றுடன் மேலும் 15 ஆயிரம் ரூபாய் பணமும் இருந்துள்ளது.

அத்துடன் மீள்குடியமர்வுக் கொடுப்பனவாகிய 20 ஆயிரம் ரூபாய் பெற்றுக் கொண்ட வங்கிப் புத்தகம் உள்ளடங்களாக 4 வங்கிப் புத்தகங்கள், பிறப்பு மற்றும் திருமணப் பதிவு சான்றிதழ்கள், மருத்துவ சான்றிதழ்கள், குடும்பப் பதிவு அட்டை உட்பட பல முக்கியமான ஆவணங்கள் இருந்துள்ளன.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக குறித்த பெண்மணி யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம் மற்றும் கற்கோவளம் கிராம சேவையாளர் ஆகியோரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

கணவனால் கைவிடப்பட்ட நிலையில் கஷ்ட நிலையில் உள்ள தன்னிடம் திருடப்பட்டப் பொருள்களைக் கருணையுள்ளம் கொண்டு தன்னிடம் மீண்டும் ஒப்படைக்குமாறு இப் பெண்மணி கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

மேற்படி கைப்பையில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் தனக்கு மிகவும் இன்றியமையாதவை என்றும் தெரிவித்துள்ள இந்தப் பெண் அவற்றை யாராவது கண்டெடுத்தால் கருணைகூர்ந்து கொக்குவில் மேற்கு, பிடாரி அம்மன் கோவிலடியிலுள்ள தனது உறவினர்களிடமோ அல்லது கற்கோவளம் கிராம சேவையாளரிடமோ சேர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டிருக்கின்றார்.

ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்ட பின்னர் யாழ்.குடாநாட்டிற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இடையில் சேவையில் ஈடுபடுகின்ற அரச மற்றும் தனியார் பஸ்களில் இதுபோன்ற திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே பஸ்களில் பயணிக்கின்ற பொது மக்கள் தங்கள் பெறுமதி மிக்க பொருள்கள் விடயத்தில் அக்கறையாக இருக்க வேண்டும். (ச-5)

## பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியிருந்தும் விண்ணப்பங்கள் அனுப்ப முடியாத மாணவர்கள் தொடர்பான விபரங்களை திரட்டுதல்

கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உயர் கல்வி அமைச்சர் கௌரவ எஸ்.பி.திசாநாயக்கவுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பிரகாரம் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியிருந்தும் விண்ணப்பங்களை அனுப்ப முடியாமற்போன மாணவர்களின் உயர் கல்விக்கு உதவும் முகமாக சம்பந்தப்பட்ட மாணவர்கள் பின்வரும் விபரங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

01. முழுப் பெயர் :
02. தேசிய அடையாள அட்டை இல. :
03. நிரந்தர முகவரி :
04. தற்காலிக முகவரி :
05. க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றிய மாவட்டம் :
06. க.பொ.த. (உ/த) பரீட்சை சுட்டெண் :
07. க.பொ.த. (உ/த) பரீட்சை தோற்றிய பிரிவு :
08. க.பொ.த. (உ/த) பரீட்சை முடிவின் இசற் புள்ளி :
09. விண்ணப்பம் அனுப்ப முடியாமைக்கான காரணம் :

மேற்கண்ட விபரங்களைப் பூர்த்தி செய்து பின்வரும் முகவரிக்கு 15.09.2010 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பில் உதவும் பிரிவு
மகேஸ்வரி நிதியம்,
இல.110, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

த.றஜீவ்
செயற்றிட்ட இணைப்பாளர்,
மகேஸ்வரி நிதியம்.

(C-934)

## சிறுத்தை தாக்கியதில் சிறுமி படுகாயம்!

சிறுத்தை ஒன்றின் தாக்குதலுக்கு உள்ளாகிய 9 வயது சிறுமி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வருகிறார்.

இம்புல்பிட்டிய தோட்டத்தைச் சேர்ந்த ஒன்பது வயதான ரூபிக்கா என்ற சிறுமியே சிறுத்தையின் தாக்குதலில் படுகாயமடைந்தவராவர்.

நாவலப்பிட்டி இம்புல்பிட்டிய தோட்டத்தில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (ச-5)





தேவை

இணுவிலில் இயங்கும் வர்த்தக நிலையத்திற்கு பொறுப்பாகச் செயற்படக் கூடிய ஆண்கள், மற்றும் கணக்காளர் தேவை.

(ஆண்:- வயது 30-60)

தொடர்பு:- 021 4921209

(2250)





பேய் கொண்ட கங்கம்மா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை சோதிட வல்லுனர்

கே.ரவிக்குமார் சாஸ்திரி
0770790898

கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை

குறைந்த செலவில் கூறுவார்

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தைப்பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப் பிரச்சினைகள், விசேடபயணம், எதிரிகள் கண் திருஸ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத் தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் குடும்பத்தில் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிதவர்கள் ஒன்று கூடுதல்.

இவற்றினை தெரிந்து கொள்ள ஒரு முறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

திலக் லொச் அறை இல: 01
711, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் (யாழ்.இந்துக் கல்லூரி சந்தி)

மலையாள மாந்திரீகம், பேய், பிசாசு, சைவினை, சூனியம், மந்திரம் எதுவாக இருந்தாலும் அவற்றிலிருந்து விடுதலை பெற இந்தியாவிலிருந்து வந்திருக்கிறது மந்திராலயம்.

கைரேகை ஜோதிடம் பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 6.30 மணிவரை

(2251)

நீடூழி வாழ பாராட்டி வாழ்த்துகிறோம்

அரச சேவையில் 50 ஆண்டுகள் கண்ட சாணக்கிய நாயகன் மும்மாவட்ட (மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம்) முன்னாள் அரச அதிபர்

திரு. க.கணேஷ்



ஐயா அவர்கள் மும்மாவட்டங்களிலுமே எமது சபைக்கு நல்கிய ஒத்துழைப்புக்கு நன்றி கூர்ந்து நீடூழி காலம் வாழ பாராட்டி வாழ்த்துகிறோம். அது மட்டுமல்லாமல் ஏ-9 பாதை மூடிய போதும், இயற்கை அனர்த்தங்களான சுனாமி, நிஷாவின் போதும் எமது சபை சுமுகமாக இயங்க வழங்கிய ஆதரவுக்கும் எல்லாவற்றுக்கு மேலாக யாழ்.கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் நடைமுறைக்கு வர பாரிய ஆதரவு நல்கியமைக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இனியும் அவரின் சேவை ஓய்வின்றி எங்களுக்குத் தேவை என வேண்டி நீடூழி காலம் வாழ வாழ்த்துகிறோம்.

பிரதி பொது முகாமையாளர் (வ), உதவிப் பொதுமுகாமையாளர் (வ), பிராந்திய முகாமையாளர் மற்றும் சகல உத்தியோகத்தர்களும் - தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, யாழ்ப்பாணம்.

(2253)

# இன்று ஒரு தகவல்

## எடையற்ற நிலை

"எடையைக் குறைப்பதற்கு என்ன பண்ணலாம்? " என்று கேட்டார் ஒருத்தர்.

" இது என்ன பெரிய விடயம். பேசாமல் புறப்பட்டு மேலே ஆகாயத்துக்குப் போய்விடுங்கள். அங்கே போனால் உங்கள் எடை குறைந்து விடும்" என்றார் இன்னொருத்தர்.

அவர் வேடிக்கையாக இப்படி சொன்னாலும் கூட அவர் அப்படிச் சொன்னதில் ஒன்றும் தப்பில்லை.

இப்பொழுது நாம் கூட ஆகாயத்துக்குப் புறப்பட்டுப் போனால் நம் எடை குறைந்துவிடும். ஒரு கட்டத்தில் நமக்கு எடையே இருக்காது. அந்தரத்தில் மிதக்க ஆரம்பித்து விடுவோம். விண்வெளியில் ஏற்படும் இந்த நிலைமையை எடையற்ற நிலை என்று சொல்கிறார்கள். (Weightlessness)

விண்வெளிக்குப் போகவேண்டுமென்று ஆசைப்படும் எல்லோருக்கும் இங்கேயே அது போன்ற ஒரு 'எடையற்ற நிலை' யை உண்டாக்கி பயிற்சி கொடுக்கிறார்கள்.

64 வயதுடைய மைக்ரோஜர்ஸ் என்பவர் இரண்டாவது உலக யுத்தத்தில் தனது இடது காலை இழந்தவர். இந்த வயதில் இந்த நிலையில் அவருக்கு விண்வெளிக்குப் போக வேண்டுமென்று ஒரு ஆசை வந்தது. வழக்கமாக எல்லோரும் அந்த வயதில் ஒரேபடியாக மேலே போவதற்கு வழி என்னவென்று தான் கவலையுடன் காத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் இவர் கொஞ்சம் வித் தியாசமானவர். உடனே ஐரோப்பிய விண்வெளி அமைப்புக்கு விண்ணப்பித்தார். அந்த அமைப்பும் சரி என்று ஒத்துக் கொண்டது.

உடனே இவருக்குப் பயிற்சி கொடுக்க ஆரம்பித்தது. அந்தப் பயிற்சி பிரான்சில் நடந்தது.

அது எப்படியான பயிற்சியென்றால்...

விண்வெளிக்குப் பிராயாணம் செய்பவர்கள் அங்கு போய்ச் சேர்ந்தவுடன் எடை இல்லாமல் போய்விடுகிறது அல்லவா? அதே மாதிரி ஒரு எடையற்ற நிலையை ஒரு விமானத்துக்குள்ளேயே உண்டாக்குகிறார்கள்.

அந்த விமானம் ஒரு தடவை மேலே கிளம்பிவிட்டால்.. மேல் நோக்கிப் பாய்வதும் கீழ்நோக்கிப் பாய்வதுமாக சுமாராக 2 1/2 மணித்தியாலம் பறக்குமாம். அந்தச் சமயத்தில் அது 40 தடவை கீழ் நோக்கிப் பாயுமாம். அதாவது அந்த விமானத்துக்குள்ளே இருப்பவர் ஒவ்வொரு தடவையும் 20 விநாடி வீதம் 40 தடவை எடையற்ற நிலைக்கு வந்து விடுகிறாராம்.

மைக் ரோஜர்ஸ் ஏறிப்போன விமானம் இது போன்று 30 தடவை எடையற்ற நிலையை உண்டாக்கியதாம். இதில் இன்னொரு அவஸ்தையும் உண்டு.

விமானம் வேகமாக மேலே போகும் போது உடம்பின் எடை அளவுக்கு மீறி அதிகமாக தெரியும். இந்த எடை அதிகரிப்பு அவஸ்தையை அனுபவித்ததற்குப் பின் தான் ' எடையல்லாத' சுகத்தை அனுபவிக்க முடியும்.

மேலே போய்விட்டு வந்து அந்தப் பெரியவர் தன்னுடைய அனுபவத்தை விபரமாக சொல்லியிருக்கிறார்.

தாடையை மார்பில் பதித்தவாறு அவரைப் படுக்க வைத்திருந்தார்களாம். விமானம் வேகமாக மேலே போகும் போது அவருக்கு அவருடைய தலையின் எடை இரண்டுமடங்கு அதிகமாக தெரிந்ததாம். மார்பிலிருந்த கமரா ஏதோ ஒரு பாறாங்கல்லை தூக்கி வைத்தது போன்று அழுத்தியதாம்.

ஆனால் விமானம் வேகமாக கீழே இறக்கும் போது அவர் அவருடைய ஆசனத்தில் இல்லையாம். மேலே கிளம்பி அந்தரத்தில் மிதக்க ஆரம்பித்து விட்டாராம். காலை இலேசாக உதைத்திருக்கிறார். உடனே பந்து போன்று இன்னும் கொஞ்சம் மேலே எழும்பினாராம். அவருடைய கமராவும் அந்தரத்தில் மிதந்ததாம்.

அவருடைய பையிலிருந்த பேனா வெளியே கிளம்பி அவருடைய மூக்குக்கு நேராக மிதந்து வேடிக்கை காட்டியதாம். "எடையற்ற நிலையில் இருந்த போது எனக்கு ஒரு செயற்கைக்கால் பொருத்தப்பட்டுள்ளது என்பதையே நான் உணரவில்லை" என்றார் அவர். சாதாரணமாக விமானத்தில் பயணிப்பவர்கள் இந்த எடையற்ற நிலையை உணர முடியும். பொருட்காட்சியில் ரங்க ராட்டினத்தில் ஏறி சுற்றிப் பார்த்தாலும் இது தெரியும்.

மேலே எழும்பும் போது நமது உடம்பின் எடை அதிகரித்தது போன்றும் கீழே இறங்கும் போது உடம்பின் எடை இலேசானது மாதிரித் தோன்றும்.

"அதெல்லாம் சரி, அதை ஏன் வேலை மினக்கட்டு இந்த நேரத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று நீங்கள் கேட்கலாம்.

வருங்காலத்தில் விண்வெளிப் பயணம் சர்வசாதராரணமான ஆகிவிடும். நாமும் அடிக்கடி போய்வர வேண்டிய அவசியம் வந்தாலும் வருமல்லவா! அதற்காகத்தான்.

இருந்தாலும் எடையைக் குறைப்பது எப்படி என்பது தான் பலரின் கவலை.

"உடம்பைக் குறைக்க என்ன வழி?" என்று கோட்டார்ஒருத்தர்.

" தினமும் குதிரைச்சவாரி பண்ணுங்க என்றார் ஒரு டாக்டர். 6 மாதம் குதிரைச் சவாரி பண்ணினார் இவர். அதன் பின் டாக்டரிடம் போனார். ஈஈ எவ்வளவு எடை குறைந்திருக்கிறது?டுடு என்று கேட்டார் டாக்டர்.

"15 கிலோ குறைந்திருக்கிறது டாக்டர்" என்றார்.

"உங்களுக்கா ?" என்றார்.

"இல்லை குதிரைக்கு" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மாகாணமட்ட சமூக விஞ்ஞானப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலய மாணவர்களின் மாகாணமட்ட சமூக விஞ்ஞானப் போட்டி முடிவுகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

வகை I

தரம்-6

1 ஆம் இடம்

பு.சரவணன் (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி,

2 ஆம் இடம்

தெ.தனுஷா(அளவெட்டி சீனன் கலட்டி வித்தி

தரம்-8

2 ஆம் இடம்

க.மினுஜா(நவாலி அட்டகிரி சைவ வித்தி

தரம்-9

2 ஆம்இடம்

இ.ரேணுஜன்(தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி

தரம்-11

3 ஆம் இடம்

யோ.தனுஜா(சுதுமலை வடக்கு த.க.பா)

வகை-II

தரம் -7

1 ஆம் இடம்

கு. அனுசியா(குளமங்கல் றோ.க.த.க பாடசாலை)

2 ஆம் இடம்

வெ. கீர்த்தனா(மூளாய் சைவப்பிரகாச வித்தி

தரம் -8

3 ஆம் இடம்

வி.்கயன்சிகா(ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி

தரம்-10

2 ஆம் இடம்

பா.சோபனா (இளவாலை மெய்கண்டான் ம.வித்தி

3 ஆம் இடம்

துசுர்வதனரூபன்(சுதுமலை சின்மய பாரதி வித்தி

வகை-III

தரம்-6

2 ஆம் இடம்

த.சாருஜன்(யூனியன் கல்லூரி)

தரம்-9

1 ஆம் இடம்

பு.அபிராமி(பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்தி

தரம்-10

1 ஆம் இடம்

ம.கோகுலசாயி(யூனியன் கல்லூரி)

க.பொ.த(உ/த)

3 ஆம் இடம்

இ.மோகன்ராஜ்( மானிப்பாய் இந்துக் கல்லூரி)

வகை-IV

தரம்-6

2 ஆம் இடம்

க.அபர்ணா(சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

தரம்-8

1ஆம் இடம்

ம.தரண்யா(மகாஜனாக் கல்லூரி)

3 ஆம் இடம்

அ.அமிர்தவர்சினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

தரம்-10

1 ஆம் இடம்

கே.கௌசிகன் (மகாஜனாக் கல்லூரி).

3 ஆம் இடம்

அ.யாழினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

இதேவேளை தேசிய ரீதியிலான போட்டிகளுக்குரிய நிரல் கல்வி அமைச்சினால் பின்னர் அறிவிக்கப்பட்டு நடத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

## சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்

சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட சில பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டப் பணிகள் குறித்து சமூக அபிவிருத்தி அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இக் கலந்துரையாடல் சாவகச்சேரி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (எ)

# இராசி பலன்

*25.08.2010*

*(ஆவணி 9, புதன்கிழமை)*

*பிரதமை பின்னிரவு 12.44 மணிவரை*

*சதயம் பின்னிரவு 12.39 மணிவரை*

*இராகுகாலம் 12.05-1.35 மணிவரை*

*சுபநேரம் 4.35-6.05 மணிவரை*

**மேடம்** இலாபம் இருமடங்காகும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வெளிநாட்டு பயண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**இடபம்** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்து கொள்ளும் நாள், இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, அரசு வழிச்சலுகை எதிர்பார்த்த படியே கிடைக்கும்.

**மிதுனம்** மாற்று கருத்துடையோர் மனம் மாறும் நாள், கூட்டுத்தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சொத்துப் பிணக்குகள் தீரும்.

**கடகம்** பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், வாழ்க்கைத் துணை வழியே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையலாம், உதவி செய்ய முன்வந்தவர்கள் உங்களை விட்டு விலகலாம்.

**சிங்கம்** இனசன ஒத்துழைப்பால் உள்ளம் மகிழும் நாள், கனவு பலிதமுண்டு, நினைத்த புதிய சில திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி** எதிரிகள் உதிரியாகும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், உற்சாகமாகச் செயற்படுவீர்கள், கூட்டாளிகள் இணக்கத்துடன் நடந்து கொள்வர்.

**துலாம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சி வெற்றி தரும், பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கும் நாள், வாய்ப்புக்கள் வாயிற் கதவைத் தட்டும், இல்லத்தில் மங்கள ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும்.

**தனுசு** உடன் பிறப்புக்களில் ஒத்துழைப்பால் உற்சாகம் அடையும் நாள், அரசியற் செல்வாக்கு அதிகரிக்கும், வழக்குகளில் வெற்றி கிடைக்கும், பொருளாதார நிலை உயரும்

**மகரம்** நண்பர்கள் நல்ல தகவல்களை கொண்டு வந்து சேர்க்கும் நாள், தொலைபேசிச் செய்தி தொழில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம்.

**கும்பம்** கோவில் வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆதாயம் தரும் வேலை ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்** வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம்.

வளவன்

# சைவசமய கலைப் போட்டிகள்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் தனது பொன்விழா ஆண்டை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் சைவ சமய கலைப் போட்டிகள் நடத்தவுள்ளது.

இப்போட்டியில் மாணவர்களை பங்குபற்ற செய்யுமாறு சகல பாடசாலை அதிபர்களுக்கும் சைவப் புலவர் சங்கச் செயலாளர் செ.கந்தசத்தியதாஸன் அறிவித்துள்ளார்.

மேலும் விண்ணப்பங்களை போட்டி விதிகளுக்கு அமைய அனு ப்பி வைக்கப்பட் டுள்ள மாதிரி படி வத்தை தயாரித்து எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் சைவப் புலவர் செ. கந்தசத்தியதாஸன் , செயலாளர், 153 காங்கேசன் துறை வீதி , கொக்குவில் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் போட்டிகளை நடத்துவதற்கு அனைத்து சைவப்புலவர்களும் ஒத்துழைப்பு வழங்குமாறும் சைவப்புலவர் சங்கத் தலைவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளை கேட்டுக் கொண்டுள்ளார். (6-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 70 |
| தக்காளி | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 50 |
| கோவா | 80 | 60 |
| கரட் | 120 | 90 |
| பூசணி | 50 | 40 |
| புடோல் | 40 | 30 |
| வாழைக்காய் | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 |
| பாகற்காய் | 90 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 |
| பயற்றங்காய் | 140 | 100 |
| லீக்ஸ் | 140 | 90 |
| பீற்றூட் | 60 | 60 |
| கறிமிளகாய் | 80 | 70 |
| முருங்கைக்காய் | 140 | 80 |
| போஞ்சி | -- | 60 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 25 | 25 |
| தேசிக்காய் | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 |

## பல்கலைக்கழக விளையாட்டு அவையின் கிரிக்கெட் போட்டி

# பற்றீசியன் விளையாட்டுக் கழகத்தை 92 ஓட்டங்களால் வென்றது கே.சி.சி.

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அவை அழைக்கப்பட்ட கழகங்களான கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளை யாட்டுக் கழகம், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி, பற்றீசியன் விளையாட்டுக் கழகம் ஆகிய அணிகளுக்கிடையில் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியினை வருடாவருடம் நடத்துகின்றது.

ஒன்பதாவது தடவையாக இவ்வாண்டு மேற் படி போட்டிகளை தற்போது நடத்தி வருகின் றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக் கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. முதல் மூன்று விக்கெட்டுகளையும் 21 ஓட்டங்களுக்குள் இழந்தது. 4 ஆவது விக்கெட் இணைப்பாட்ட ஜோடிக்காகக் களமிறங்கிய சபானந்-உத்தமக்குமரன் ஜோடி நிதானமாக ஆடியது. எனினும் 23 ஓட்டங்களை பெற்ற வேளை சபானந் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து உத்தமக்குமரனுடன் ஜோடி சேர்ந்த தாபன் ஓட்டங்கள் குவிப்பதில் ஈடுபட்டனர். தாபன் அரைச்சதம் கடந்தார். உத்தமக்குமரன் அதிரடியாக ஆடி சதம் அடித்து அணியினை வலுப்படுத்தினார்.

தாபன் 56 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார். இருவரும் இணைப்பாட்டமாதம்மிடையே 113 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். தொடர்ந்து உத்தமக்குமரனும் 105 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார். இவருடைய இந்த ஓட்ட எண்ணிக்கையில் 4 சிக்ஸர்களும், 6 பவுண்டரிகளும் அடங்கும்.

பின்வரிசை துடுப்பாட்ட வீரர்களும் தம் பங்கிற்கு ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழக்க 46 ஓவர்களில் 260 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி.

பந்துவீச்சில் பற்றீசியன் சார்பாக லவதீசன் 3 விக்கெட்களையும், சுரேன், முகுந்தன், முரளி தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

261 என்ற வெற்றியிலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பற்றீசியன் விளையாட்டுக் கழகம் தொடக்க அடித்தளத்தை பலமாக இட்டது. 26 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்று பலமான நிலையில் இருந்தது. எனினும் 4ஆவது விக்கெட் வீழ்த்தப்பட பற்றீசியன் அணியின் சரிவு ஆரம்பமானது.

தொடர்ந்து விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டன. இறுதியில் 43 ஓவர்களில் 168 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்து 92 ஓட்டங்களால் தோல்வியடைந்தது பற்றீசியன் விளையாட்டுக் கழகம். துடுப்பாட்டத்தில் முரளி 45 ஓட்டங்களையும், விதுபாலா 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் றொபேசன், கிருபவன் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

## ஆயிரத்து 500 பேருந்துகளை புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளதிட்டம்

## இலங்கை போக்குவரத்துச் சபை நடவடிக்கை

(கொழும்பு)

புதிதாக ஆயிரத்து 500 பேருந்துகளை சேவையில் இணைத்துக்கொள்வதற்கு இலங்கை போக்குவரத்துசபை திட்டமிட்டுள்ளது.

வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான வழிமுறையாகவே பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு தீர்மானித்ததாக இலங்கைப் போக்குவரத்து சபையின் தலைவர் எம்.டி.பந்துசேன தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இலங்கைப் போக்குவரத்து சபை தற்போது பெறும் வருமானத்தை 3 மடங்காக அதிகரித்துக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்ததிட்டத்திற்காக ஆயிரம் பேருந்துகளை இறக்குமதி செய்வதற்கு எண்ணியுள்ளதாக சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பழுதடைந்த நிலையில் சேவையிலிருந்து அகற்றப்பட்டுள்ள 500 பேருந்துக்களை திருத்தி அதனையும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான 4 ஆயிரத்து 500 பேருந்துகள் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் உத்தேசத்திட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் அந்த எண்ணிக்கை 6 ஆயிரமாக உயர்வடையுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலான காலப்பகுதியில் இலங்கைப் போக்குவரத்து சபையின் வருமானத்தில் 9 இலட்சம் ரூபா அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுளளது. (ச-6-4)

## ஆளும் கட்சியினரிடம் மரியாதை கிடையாதாம்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை வெற்றி கொண்ட இராணுவத் தளபதியை உதாசீனம் செய்தவர்கள், ஆளும் கட்சியிடம் மரியாதையை எதிர்பார்க்க முடியாது. இந்நிலையில், தம்மை கேலி செய்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் ஆச்சரியத்தை ஏற்படுத்தாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் முயற்சிக்காக தாம் 23 மாதங்கள்ஆளும் கட்சிக்கு ஆதரவளித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

கரு ஜெயசூரிய எந்தவித அடிப்படையுமின்றி குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த அண்மையில் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் இதனைக் குறிப்பிட்டார். (ச-5)

## மகாவலியில் நீராடிய மூவரை காணவில்லை

மகாவலி கங்கையில் நீராடிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காணாமற் போயுள்ளனர்.




இவர்கள் மூவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.


தாய், மகன், மகள் ஆகியோரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர். பேராதனைப் பொலிஸ் பிரிவில் உள்ள கொஹாகொடை என்ற இடத்தில் இவர்கள் நீராடும் போது இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. இவர்கள் கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியைச் சேர்ந்தவர்களாகும். இவர்களைத் தேடும் பணி ஆரம்பமாகியுள்ளது. ஆற்றில் அதிக நீர் ஓடுவதனால் தேடும் பணிகள் சற்று தாமதமாகியுள்ளன. (ச-5)

## எலிக் காய்ச்சலால் 50 பேர் பலி!

(கொழும்பு)

நாட்டில் இவ்வருடத்தில் ஐம்பது பேர் எலிக்காய்ச்சல் காரணமாகப் பலியாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது. இக்காலப் பகுதியில் 2300 பேர் இந்நோய்த்தாக்கத்திற்குள்ளாகியதாக அப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச-5)







நல்லூர்க் கந்தனின் திருமஞ்சத் திருவிழாவான நேற்று முருகப் பெருமான் உள்வீதி வலம் வருவதையும் ,பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் நடுவே முருகப் பெருமான் திருமஞ்சத்தில் வீதியுலா வருவதையும் படங்களில் காணலாம்.

# பல்கலை அனுமதி பெற்றிருந்தும் உயர்கல்வியை தொடர முடியாத மாணவர்களுக்கு மீள் அனுமதி

## அமைச்சர் டக்ளஸின் வேண்டுகோளையடுத்து நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

வட பகுதி மாணவர்கள் உயர் கல்வி மேற்கொள்வதில் ஏற்படும் பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுடன் விரிவாக கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பு வோட் பிளேசிலுள்ள உயர் கல்வி அமைச்சில் இடம்பெற்ற இச் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

குறிப்பாக பல்கலைக்கழக அனுமதி பெற்றும் அல்லது தகைமை இருந்தும் உயர் கல்வியினை தொடரமுடியாத வடபகுதி மாணவர்களின் கல்வியை முன்கொண்டு செல்வதே இச் சந்திப்பின் பிரதான நோக்காக இருந்தது.

இதன் பிரகாரம் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டு, பதிவினை மேற்கொண்ட நிலையில் உயர் கல்வியினை தொடர முடியாத மற்றும் தகைமை இருந்தும் பதிவினை மேற்கொள்ளாத மாணவர்கள் தொடர்பில் கடந்த யூலை மாதம் 14ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவாக இடம்பெயர்ந்தோர் நிவாரணக் கிராமங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான மீள் அனுமதி வழங்க வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டார்.

இதன் மூலம் சுமார் 500 மாணவர்கள் நன்மையடையவுள்ளனர் என்பது முக்கிய விடயமாகும். அமைச்சரின் மேற்படி வேண்டுகோளுக்கு அமைய உயர் கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உரிய பணிப்புரைகளை வழங்கினார்.

மேலும் தகுதி இருந்தும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பங்களை அனுப்ப முடியாத மாணவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குமாறு கேட்டுக்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஊடகங்கள் வாயிலாக மேற்படி விடயத்தினை வெளிக்கொண்டு வருவதன் மூலம் பெறப்படும் மாணவர்களின் விபரங்கள் மற்றும் எண்ணிக்கை உயர் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உயர் கல்வி அமைச்சர் ஊடாக அது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை கடந்த ஏப்ரல் மாதம் இருபதாம் திகதி யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் 2008ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை 2009ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரை கல்வியாண்டுக்கான நுண்கலை துறைக்கு இணைத்துக் கொள்ளுதல் சம்பந்தமாகவும் நிவாரண கிராமங்களில் உள்ள மேற்படி மாணவர்களை விடுவிப்பது தொடர்பாகவும் பாதுகாப்பு தரப்பினரிடமிருந்து உரிய கடிதமொன்றினை பெற்றுக்கொள்ள ஆவன மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துக் கொண்டார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் மற்றும் சித்த மருத்துவ பீட மாணவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் விடயங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரியப்படுத்திய போது, தான் மருத்துவ பீட மாணவர்களுடன் ஏற்கனவே கலந்துரையாடியுள்ளதாகவும் சித்த மருத்துவத்துறை தொடர்பாக இம் மாதம் யாழ்ப்பாணம் வருகை தரும் போது அது தொடர்பான தீர்வுகளை பெற்றுத் தருவதாகவும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க உறுதியளித்தார்.

இச் சந்திப்பின் இறுதியில் யாழ். பல்கலைக் கழகத்தில் சட்ட பீடம் தொடர்பில் எடுத்துரைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உரிய வசதிகளுடனான பொருத்தமான நூலகம் ஒன்றினை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தியதுடன் கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளர்களை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் இந் நடவடிக்கைகளுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்களூடாக உரிய நிதியுதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அமைச்சரினால் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# 30 வருடம் சரக்குக் கப்பலாக செயற்பட்ட எம்.வி.சன்.சி. ஆட்கடத்தலில் ஈடுபடுகிறது

## முன்னாள் உரிமையாளர்கள் கவலை

(கனடா)

30 வருடங்களாக சரக்கு கப்பலாக செயல்பட்டு வந்த எம்.வி.சன்.சி சட்டத்திறகு புறம்பாக ஆட்கடத்தலில் ஈடுபட்டு தெற்காசியாவிலிருந்து கனடாவிறகு 492 பேரை எடுத்து வந்தது மிகவும் வருந்தத்தக்க ஒன்று என இந்தக் கப்பலின் முன்னாள் உரிமையாளர்கள் கூறியுள்ளனர்.

இந்தக் கப்பலின் தற்போதைய உரிமையாளர்களான சன் அன்ட் ரஷியா கூட்டுத்தாபனத் துடன் தங்களுக்கு எந்த வித இணைப்பும் இல்லை எனவும் தாய்லாந்து நாட்டில் உள்ள புரோக்கர் ஒருவர் மூலமாக கடந்த ஐந்து மாதங் களுக்கு முன்பே இந்த கப்பல் விற்கப்பட்டு விட்டது என இக்கப்பலின் முன்னாள் உரிமையாளர்களான பாங்காக்கை சேர்ந்த ஹாரின் குழும மேலாளர் தெரிவித்துள்ளார்.

**உரிமையாளருடன் தொடர்பில்லை**

கப்பல் விற்கப்பட்டதற்குப் பின் எம்.வி. சன்.சி கப்பலின் தற்போதைய உரிமையாளருடனோ அல்லது அந்தக் கப்பலுடனோ எங்களுக்கு எவ்வித தொடர்பும் இல்லை.

கனடா விற்கு இந்த கப்பல் சட்டத்திறகு புறம்பாக ஆட்களை எடுத்துச் சென்றதை கூட செய்திகளின் வாயிலாகவே தெரிந்து கொண்டோம் என ஹாரின் குழும மேலாளர் ஊடகமொன்றிடம் கூறியுள்ளார்.

இந்த செய்தி தங்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிவித்தார். தாய்லாந்து புரோக்கர் ஒருவரே இந்த கப்பல் விற்கப்பட்ட போது விற்பனை தொடர்பான அனைத்து மத்தியஸ்தம் செய்யும் பணிகளிலும் ஈடுபட்டார் என கூறிய மேலாளர் ஹாரின் குழுமத்திற்கும் தற்போதைய இக்கப்பலின் உரிமையாளருக்கும் எந்த பிணைப்பும் இல்லை என உறுதிபடக் கூறினார்.

இந்தக் கப்பலின் தற்போதைய உரிமையாளர்கள் தங்கள் முகவரியில் பாங்கொக், தாய்லாந்து என்று மட்டுமே கொடுத்திருப்பதாகவும் அவர்களிடம் ஒரு கப்பல் மட்டுமே உள்ளது. என்றும் மேலும் கூறினார். முன்பு ஹாரின் பனிச் 19 என பெயரிடப்பட்டிருந்த இந்தக் கப்பல் இந்த வருடத்தின் முற்பகுதியில் சன் அன்ட் ரஷியா கூட்டுத்தாபனத்திடம் விற்கப்பட்டதை கடந்த வாரம் நேஷனல் போஸ்ட் என்ற ஊடகம் செய்தியாக வெளியிட்டிருந்தது.



**கப்பலின் பெயர் மாற்றம்**

புதிய உரிமையாளர்கள் மார்ச் 30 ஆம் திகதி இந்தக் கப்பலின் பெயரை எம்.வி. சன்.சி என மாற்றியதுடன் இந்தக் கப்பலின் பதிவை திரும்பப் பெறுமாறு தாய்லாந்து கப்பல் துறையை கேட்டுக் கொண்டனர்.

எம்.வி.சன்.சி கப்பல் கனடாவை அடைந்த போது அதில் தாய்லாந்து நாட்டுக் கொடி இல்லை.

நாட்டின் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை. 59 மீற்றர் நீளமுள்ள இந்த சரக்கு கப்பல் ஜப்பானில் 1980 இல் கட்டப்பட்டது. 492 அகதிகளை ஏற்றி வந்த எம்.வி.சன்.சி கப்பல் பசிபிக் பிராந்தியத்தை தாண்டும் முன்னதாக தடுத்து நிறுத்தக் கூடிய வாய்ப்பிருந்தும் கனடா அதை செய்யவில்லை. முன்னதாக மே மாதத்தில் தாய்லாந்து வளைகுடாவில் இந்த கப்பல் நிற்பதை ராயல் தாய் கடற்படை கவனித்தது.

இருப்பினும் தாய்லாந்து நாட்டின் கடல் எல்லைக்கு அப்பால் கப்பல் இருந்ததால் அதை தடுக்கவில்லை. பின்னர் கம்போடியா நாட்டின் கடற்பகுதிகள் நுழைந்து எம்.வி.சன்.சி கப்பலை அந்நாட்டு அதிகாரிகளும் தடுக்க முன்வரவில்லை.

அதே நேரத்தில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையர் எம்.வி.சன்.சி கப்பலுடன் தொடர்பில் இருந்தார். கடந்த ஜூலை மாதம் நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கை அகதிகளை ஏற்றிக் கொண்டு கனடாவை நோக்கி இந்த கப்பல் செல்கிறது என்ற தகவல் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையருக்கு அந்த கப்பலில் பயணம் செய்த பயணி ஒருவர் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான உயர் ஆணையம் கப்பலில் இருப்பவர்களுக்கு எந்து ஆபத்தும் இல்லை என்பதை உறுதி செய்ததாகவும் உடனடியாக இதை தாய்லாந்து நாட்டு அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார். இது தொடர்பான நூற்றுக்கணக்கான மின்னஞ்சல்கள், கடிதங்கள், தொலைநகல்கள் ஆகியவை அகதிகளுக்கான உயர் ஆணையத்திற்கு வந்துள்ளன.

அவை அனைத்தும் உண்மையாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அதே நேரத்தில் அந்த கடிதங்கள் உண்மைதானா என்பதை விரைவில் உறுதிப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. உடனடியாக இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தே பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மெத்தனப் போக்கு கடைபிடிக்கப்படவில்லை.

ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்களை சட்டப்படியாக தண்டிக்கவும் இந்த ஆணையம் உதவும் என மேலும் கூறினார். அதே நேரத்தில் எம்.வி. சன்.சி கப்பல் ஆட்கடத்தலுக்கான வேலைகள் தாய்லாந்தில் இருந்தே அரங்கேறியதாக சந்தேகம் எழுந்துள்ளது.

கப்பலின் உரிமையாளர்களைப் பற்றிய விபரம் ஏதும் தெரியாது எனக் கூறியுள்ள நிலையிலும் ஹாரின் குழுமம் தாய்லாந்து அதிகாரிகளின் விசாரணைகளுக்கு முழு ஒத்துழைப்பை அளித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வடக்குக் கிழக்கிலுள்ள வாவிகள் துரிதகதியில் புனரமைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து வாவிகளும் துரிதகதியில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீர்ப்பாசனம் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சா நிமல் ஸ்ரீ பாலடிசில்வா தலைமையில் இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் விவசாயிகளுக்கு தேவையான நீரை தடையின்றி விநியோகிப்பது இந்த திட்டத்தின் நோக்கமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக மன்னார் மாவட்டத்தின் முசெலிப் பிரதேச செயலக பிரிவிலுள்ள வாவிகளை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வாவிகள் மூலம் கிடைக்கும் நீரைக்கொண்டு எதிர்வரும் பெரும்போகத்தில் ஆயிரத்து 200 ஏக்கரில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

யுத்த சூழல் காரணமாக இடம் பெயர்ந்த சுமார் 800குடும்பங்களை சேர்ந்த மக்கள் ஏற்கனவே முசெலிப் செயலகப்பரிவில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு தேவையான குடிநீரை வழங்கும் வகையில் 16 கிணறுகளை அமைப்பதற்காக 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தி தொடர்பிலான கலந்துரையாடல்

சாவகச்சேரி பிரதேசத்திற்குட்பட்ட சில பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித்திட்டப் பணிகள் குறித்து சமூக அபிவிருத்தி அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இக்கலந்துரையாடல் சாவகச்சேரி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் யுத்தத்தினால் சேதமடைந்த வணக்கஸ்தலங்கள், வீடுகள், மலசல கூடங்கள் மற்றும் வீதிகள் என்பவற்றை புனரமைப்பது தொடர்பான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதன் போது கோரிக்கைகள் தொடர்பில் உரிய அதிகாரிகள் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், விரைவில் உயரதிகாரிகளையும் வரவழைத்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து உடனடி தீர்வுகள் எட்டப்படுமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (6)

# உடற்பருமனைக் கட்டுப்படுத்தும் கொடுக்காய்ப்புளி —ஆய்வில் தகவல்

(கொழும்பு)

கொடுக்காய்புளியிலுள்ள அமிலத்தன்மை உடற் பருமனை கட்டுப்படுத்துகின்றமை ஆய் வொன் றின் மூலம் உறுதி செய்யப்பட்டுள் ளது.

இது தொடர்பாக உள்நாட்டு, வெளி நாட்டு ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வெற்றியளித்துள்ளதாக விவசாய அமைச்சின் தொழில் முயற்சி அபிவிருத்தி பணிப்பாளர் கலாநிதி ரி.பி.ரி. விஜயரத்தின தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கொடுக்காப்புளியை உடம்பில் சேர்த்துக்கொள்வதன் மூலம் உடலின் பருமனை குறைத்துக்கொள்ள முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த அமிலம் உடலில் சமிபாடு அடைதலை சீர்படுத்துவதற்கு உதவுகின்றமை தெரியவந்துள்ளது.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் உடல் பருமனை கட்டுப் படுத்துவதற்காக கொடுக்காய்ப்புளி அமிலம் பயன்படுத்தப்படுவதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

# வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன

மக்களின் வாழ்வாதாரத் திட்டங்களுக்கு எனது ஆதரவு என்றென்றும் இருக்குமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இடம் பெயர்ந்த மக்களுக்குரிய வாழ்வாதாரத் திட்டத்திற்கான மேம்பாட்டு உதவிப் பொருட்களை வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான வாழ்வாதாரத் திட்டங்கள் மூலம் எமது மக்கள் நன்மையடைவதும் முன்னேற்ற மடைவதும் தான் முக்கியமானதாக இருக்க வேண்டும். தமிழ்ச் சமூகம் எப்போதும் சுயதொழில் வாய்ப்பின் மூலம் வளர்ச்சியடைந் துள்ளமைக்கு பல சான்றுகள் இருக்கின்றன. அந்த வகையில் இந்த மக்களுக்கு உதவி புரிந்துள்ள சொண்ட் நிறுவனத்தின் பங்கு வரவேற்கத்தக்கது.

யுத்தம் மூலம் இழந்தவற்றை இவ்வாறான உதவித் திட்டங்களின் மூலம் நிவர்த்தி செய்யப்படுவதுடன் மக்களின் வாழ்வாதாரத் திட்டத்திற்கு உதவி புரியும் சொண்ட் போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு எனது ஆதரவு எப்போதும் இருக்குமென்றும் அமைச்சர் உறுதி வழங்கினார்.

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலயமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சாவகச் சேரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட 38 பயனாளிகள் இனங்காணப்பட்டனர். அவர்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தையல் இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்தி ரங்கள், பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் இயந்திரங்கள், நீர்ப்பம்பிகள் மற்றும் கோழி வளர்ப்புக்கான உதவிப் பொருட்களும் வழங்கப்பட்டன. (6)


# PATRICIAN INSTITUTES

## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

## ஆரம்பம் : 01.09.2010

*மாணவர்களுக்கு மகிழ்ச்சியான ஓர் நற்செய்தி!*

எமது நிறுவனம் மூன்றாம் நிலைக்கல்வி, தொலைக்கல்வி ஆணைக் குழுவில் பதியப்பட்டு பயிற்சிகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன என்பதை அறியத்தருகிறோம்.

## TVEC REG -NO-P 25 /0021

### 01. COMPUTER COURSES

| | |
|---|---|
| A. ADVANCED IN COMPUTER PROGRAMMING | DURATION 8 MONTHS |
| B. DIPLOMA IN MICROSOFT OFFICE | DURATION 4 MONTHS |
| C. DIPLOMA IN DESK TOP PUBLISHING | DURATION 4 MONTHS |
| D. DIPLOMA IN VIDEO EDITING | DURATION 4 MONTHS |
| E. DIPLOMA IN TYPE SETTING | DURATION 3 MONTHS |
| F. DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING | DURATION 4 MONTHS |
| G. DIPLOMA IN SOFTWARE ENGINEERING | DURATION 6 MONTHS |
| H. DIPLOMA IN MICRO MEDIA | DURATION 4 MONTHS |
| I. DIPLOMA IN WEB MULTIMEDIA | DURATION 4 MONTHS |
| J. PROFESSIONAL DIPLOMA IN GRAPHIC DESIGN | DURATION 6 MONTHS |
| K. COMPUTER HARDWARE TECHNOLOGY | DURATION 4 MONTHS |
| L. INTERNET & E-MAIL | DURATION 1 MONTH |
| M. GENERAL INFORMATION TECHNOLOGY (GIT) | DURATION 4 MONTHS |
| N. INFORMATION & COMMUNICATION TECHNOLOGY (ICT) | DURATION 4 MONTHS |
| O. CHILDREN'S KIDS | DURATION 4 MONTHS |

### 02. CERTIFICATE COURSES

- MS WORD
- MS EXCEL
- MS ACCESS
- MS POWER POINT
- VISUAL BASIC
- JAVASCRIPT
- MYOB
- ADOBE PHOTOSHOP
- PAGEMAKER
- FLASH
- QUICK BOOK
- SIMPLY ACCOUNTING
- COREL DRAW

DURATION 3 MONTHS EACH

*G- Tec Computer Education நிறுவனத்தின் ஆதரவில் MS Office,E-Mail, Internet கற்கை நெறிகள் மிகவும் குறைந்த கட்டணத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. முழுக்கட்டணம் 1600/- (குறிப்பு :இலவச தமிழ் கணனிய பாடப்புத்தகம் வழங்கப்படும்)*

| | |
|---|---|
| 03. SHORT HAND TYPING (ENGLISH)<br>சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்)<br>கணனி மூலமும் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும். | DURATION 6 MONTHS |
| 04. SHORT HAND TYPING (TAMIL)<br>சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்)<br>கணனி மூலமும் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும். | DURATION 6 MONTHS |
| 05. GENERAL MOTOR MECHANISM<br>(Petrol & Diesel வாகனங்கள்) மோட்டார் வாகனம் திருத்துதல் | DURATION 6 MONTHS |
| 06. GENERAL ELECTRICIAN (Wiring & Re Winding)<br>ஜெனரல் எலக்ரிஷன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) | DURATION 6 MONTHS |
| 07. RADIO & T.VREPAIRING<br>வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் | DURATION 6 MONTHS |
| 08. LATHE MACHINE OPERATION<br>கடைச்சல் இயந்திரப் பயிற்சி (on the job training வழங்குதல்) | DURATION 6 MONTHS |
| 09. ARC WELDING<br>மின் ஒட்டுநர் பயிற்சி (on the job training வழங்குதல்) | DURATION 6 MONTHS |
| 10. CARPENTRY (With use of machinery)<br>மரவேலை (on the job training வழங்குதல்) | DURATION 6 MONTHS |
| 11.REFRIGERATION AND AIRCONDITIONING<br>குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | DURATION 6 MONTHS |
| 12. தையல் பயிற்சி (Sewing) | DURATION 4 MONTHS |

குறிப்பு:

1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் பயிற்சிக் கட்டணத்தில் சலுகைகள் பெறலாம்.
3. பயிற்சிநெறிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**

REGISTRAR,
PATRICIAN INSTITUTE,
61(59), St. PATRICK'S ROAD,
JAFFNA.

T.P.NO: 021 222 6148
FAX : 021 222 6148
E.Mail: Spitee@Sltnet.lk

(C-933)

# மலையில் மோதி விமானம் நொறுங்கியதில் 15 பேர் பலி

## நேபாளத்தில் பயங்கரம்

(காத்மண்ட்)

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் இருந்து எவரெஸ்ட் மலைப்பகுயில் உள்ள லக்லாவுக்கு நேற்று காலை சிறிய ரக விமானம் ஒன்று புறப்பட்டுச் சென்றது. அந்த விமானத்தில் 11 பயணிகளும் 3 விமான ஊழியர்களும் இருந்தனர். பயணிகளில் 6 பேர் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளாவர். எவரெஸ்ட் மலை சிகரத்துக்கு சென்று சுற்றிப் பார்ப்பதற்காக அவர்கள் நேபாளம் வந்திருந்தனர்.

விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் பலத்த மழை பெய்தது. என்றாலும் எவரெஸ்ட் சிகரத்துக்கு சென்று விடலாம் என்ற நம்பிக்கையில் விமானி தொடர்ந்து விமானத்தை ஓட்டிச் சென்றார்.

தலைநகர் காத்மாண்டுவில் இருந்து சுமார் 80 மைல் தொலைவில் அந்த விமானம் பறந்து கொண்டிருந்த போது மழை சீற்றம் அதிகரித்தது. இதனால் குட்டி விமானம் நடுவானில் தள்ளாடியது. இனி தொடர்ந்து செல்ல முடியாது என்பதை உணர்ந்த விமானி விமானத்தை காத்மாண்டுக்கு திருப்பினர்.

ஆனால் மிக பலத்த மழை பெய்ததால் விமானத்தை தரை இறக்க அவர் முடிவு செய்தார். விமானத்தை சற்று தாழ்வாக அவர் பறக்க விட்டார். அப்போது அந்த விமானம் சிறிய மலைமீது மோதி நொறுங்கியது.

இந்த கோர விபத்தில் குட்டி விமானத்தில் இருந்த 14 பேரும் பலியாகி விட்டதாக தெரிய வந்துள்ளது. நேபாள பொலிஸ் அதிகாரி ராம் பகதூர் கூறுகையில், சிகர்பூர் என்ற கிராமம் அருகே விமானம் விழுந்து நொறுங்கியுள்ளது என்றார்.

விமானம் விழுந்து கிடக்கும் இடத்துக்கு நடந்து தான் செல்ல முடியும். அந்த கிராமத்துக்கு மக்வார்னூர் என்ற நகரம் வழியாக செல்லவே பாதை உள்ளது பலத்த மழை காரணமாக மக்வார்னூர் நகரம் வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கிறது. மழை நின்று தண்ணீர் வடிந்தால் தான் மீட்புப்பணிகளை செய்ய முடியும்.

விபத்துக்குள்ளான விமானம் ஜெர்மனி நாட்டில் தாயாரிக்கப்பட்டதாகும். இந்த விமானத்தை தனியார் போக்குவரத்து நிறுவனமான அக்னி ஏர்லைன்ஸ் நிறுவனம் நடத்தி வந்தது. (6)

# சட்டவிரோத தொழிலாளர்களை தடுக்க பயோமெட்ரிக் முறை

## மலேசியா அறிமுகம்

வெளிநாடுகளில் இருந்து தங்களது நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைந்து பணிபுரிய முனையும் தொழிலாளர்களை தடுக்கும் வகையில் பயோமெட்ரிக் முறையை (விரல்ரேகைப் பதிவு) அறிமுகம் செய்ய மலேசிய அரசு முடிவெடுத்துள்ளது.

இதை அந்நாட்டின் உள்துறை அமைச்சர் ஹிஷாமுதீன் ஹூசைன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மலேசியாவுக்குள் சட்ட விரோதமாக வெளிநாட்டுத் தொழிலாளர்கள் நுழைவது வழக்கமாக இருந்து வருகிறது. இதை தடுப்பதற்கு அரசு முடிவெடுத்துள் ளது. இதற்காக நாட்டுக்குள் நுழையும் ஒவ்வொரு வெளிநாட்டவரின் விரல் ரேகை உள்ளிட்ட அவர்களின் அனைத்து தகவல்களையும் திரட்டும் பயோமெட்ரிக் முறை அறிமுகம் செய்யப்படவுள்ளது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இதற்கான பணி முழு வீச்சில் ஆரம்பமாகவுள்ளது என்று தெரிவித்தார். (6-2)

# வெள்ளத்தில் பேருந்து சிக்கி 22 பேர் பலி; 15 பேர் மீட்பு

(லாகூர்)

பாகிஸ்தானில் வெள்ளத்தில் பேருந்து ஒன்று சிக்கியத்தில் 22 பயணிகள் நீரில் மூழ்கி பலியாகியுள்ளனர். இதனிடையே வெள்ள சேத நிவாரண பணிகளுக்காக வெளிநாடுகள் அளித்துள்ள 4 ஆயிரம் கோடி ரூபாய் நிதி தீவிரவாத அமைப்புகளிடம் சேர்ந்து விடும் அபாயம் உள்ளதாக மேற்கத்திய நாடுகள் கவலை அடைந்துள்ளன.

பாகிஸ்தானில் அண்மையில் பெய்த கன மழையால் வரலாறு காணாத வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் சுமார் 2 கோடி மக்கள் பாதிக்கப்பட்டனர். இலட்சக்கணக்கான மக்கள் வீடுகள் மற்றும் உடைமைகளை இழந்து தவித்து வருகின்றனர்.

இதனிடையே லாகூரிலிருந்து பெஷாவர் நகருக்கு சென்ற பேருந்து ஒன்று ராஜன்பூர் மாவட்டம் அருகே வெள்ளத்தில் சிக்கியது. அப்போது பேருந்து நீரில் மூழ்கி அதிலிருந்த பயணிகள் 22 பேர் உயிர் இழந்தனர். 15 பயணிகள் மீட்கப்பட்டனர். சிந்து நதியில் ஏற்பட்ட வெள்ளம் குறையாமல் உள்ளதால் பொது மக்கள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இதனிடையே இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் பாகிஸ்தானுக்கு நான்காயிரம் கோடி ரூபாய் வரை நிதியுதவி அளித்துள்ளது.

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத அமைப்புகள் வெள்ள நிவாரண நிதியை சர்வதேச அளவில் திரட்டி வருவதாகவும், அதனை இங்கிலாந்தில் உள்ள முஸ்லிம் தீவிரவாத அமைப்புகளுக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரியவருகிறது.

இது வெள்ள நிவாரணத்திற்கு பயன்படுத்தப்படுமா அல்லது ஆயுதங்கள் வாங்குவதற்கு பயன்படுத்தப்படுமா என்ற சந்தேகம் மேற்கத்திய நாடுகள் மத்தியில் எழுந்துள்ளது. (6)

# 2010 ஆம் ஆண்டின் பிரபஞ்ச அழகியாக மெக்சிகோவின் ஜிம்னா நவரேடா தெரிவு



(லாஸ்வேகாஸ்)

2010 ஆம் ஆண்டின் பிரபஞ்ச அழகியாக மெக்சிகோவின் ஜிம்னா நவரேடா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

உலகம் முழுவதிலுமிருந்து அவருக்கு பாராட்டுகளும் வாழ்த்துக்களும் குவிந்து வருகின்றது. அமெரிக்காவின் கடற்கரை தீவான லாஸ்வேகாஸ் நகரில் 59 ஆவது உலக அழகிப்போட்டி நடைபெற்றது. பல பிரிவுகளின் கீழ் நடைபெற்ற போட்டியில் 15 அழகிகள் இறுதி சுற்றுக்கு முன்னேறினர்.

உடை அலங்காரம், சிகை அலங்காரம், பொது அறிவு உள்ளிட்ட அனைத்து பிரிவுகளிலும் பார்வையாளர்களை அசத்திய மெக்சிகோவின் ஜிம்னா நவரேடா பிரபஞ்ச அழகியாக அறிவிக்கப்பட்டார்.

இருபத்து இரண்டு வயதாகும் நவரேடா மெக்சிகோ நாட்டில் உணவு கட்டுப்பாட்டு நிபுணராகவும், அழகுக்கலை நிபுணராகவும் பணியாற்றி வருகிறார்.

இவரைத் தொடர்ந்து பிரபஞ்ச அழகிக்கான இரண்டாவது இடத்தை ஜமைக்கா நாட்டு அழகியும், அவுஸ்திரேலிய அழகி மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளனர். இந்தியா சார்பில் இப்போட்டியில் கலந்து கொண்ட அழகி இறுதி போட்டிக்குக் கூட தகுதி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (6)




# சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்கள் உயிருடன்!

## சிலி ஜனாதிபதி தெரிவிப்பு

(சான்டியாகோ)

சுரங்கத்துக்குள் சிக்கிய தொழிலாளர்கள் அனைவரும் உயிருடன் இருக்கிறார்கள் என்று சிலி நாட்டின் ஜனாதிபதி செபஸ்தியான் பைனேரா தெரிவித்துள்ளார்.

சிலியின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள கோபியாகோ நகருக்கு அருகில் தங்கச் சுரங்கம் கடந்த ஓகஸ்ட் 5 இல் இடிந்து விழுந்தது. இதில் சுரங்கத்துக்குள் பணியில் ஈடுபட்டிருந்த 33 தொழிலாளர்களும் சிக்கினர்.

கடந்த 22 ஆம் திகதி வரை அவர்களிடம் இருந்து எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை. இதனால் அவர்களது நிலை என்னவென்பது தெரியாமல் இருந்தது. அவர்கள் இறந்திருக்கவே வாய்ப்புள்ளது என்று சிலி அரசு நினைத்தது.

இந்நிலையில் மீட்புக் குழுவினர் உள்ளே அனுப்பிய சிவப்பு பென்சிலில் கிறுக்கி தாங்கள் உயிருடன் இருப்பதாக சுரங்கத்துக்குள் சிக்கியவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர். தொழிலாளர்கள் சிக்கியுள்ள சுரங்கத்தை கடந்த 22 ஆம் திகதி ஜனாதிபதி செபஸ்தியான் பைனேரா பார்வையிட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில் ,

சுரங்கத்துக்குள் சிக்கிய 33 தொழிலாளர்களும் உயிருடன் இருப்பதாக தகவல் அளித்துள்ளனர்.

இது மகிழ்ச்சி அளிக்கிறது. சுமார் 700 மீற்றர் ஆழத்தில் பேராபத்தில் சிக்கியுள்ள நிலையிலும் அவர்கள் உள்ளே இருந்து தகவல் அளித்துள்ளனர்.

அவர்களின் துணிச்சலையும் வீரத்தையும் பாராட்டுகிறேன்.

அவர்களை மீட்பதற்கான பணியை நாம் விரைந்துமேற்கொண்டுள்ளதை அவர்கள் அறிவார்கள் . அவர்களுக்கு உணவு , தண்ணீர் மற்றும் தொலைத்தொடர்பு சாதனம் அனுப்பி வைக்கப்படும் என்றார்.

இதனிடையே மீட்புக் குழுவுக்கு தலைமை தாங்கியுள்ள பொறியியலாளர் ஆன்ட்ரெஸ் கூறுகையில், தொழிலாளர்களை விரைந்து மீட்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். அவர்கள் மிக ஆழத்தில் சிக்கியுள்ளதால் அவர்களை நெருங்க குறைந்தது 120 நாள்கள் ஆகும் என்றார். (6-2)

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு; 26 பேர் பலியாகியுள்ளனர்

(பெஷாவர்)

பாகிஸ்தானில் இரு வெவ்வேறிடங்களில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவங்களில் 26 பேர் பலியாகினர். பாகிஸ்தானின் வடக்கு பகுதியில் வாசிரிஸ்தான் மாவட்டத்தின் தலைநகர் வானாவில் மசூதி ஒன்றில் நேற்று முன்தினம் தொழுகை நடந்து கொண்டிருந்தது. முன்னாள் எம்.பி. மவுலானா நூர் முகமது உள்ளிட்டோர் தொழுகை நடத்திக் கொண்டிருந்தனர். இந்த கூட்டத்தில் புகுந்த தற்கொலைக்குண்டுதாரி தன் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தான்.

இந்தச் சம்பவத்தில் முன்னாள் எம்.பி. மவுலானா உள்ளிட்ட 18 பேர் உடல் சிதறி பலியாகினர். ஏராளமானவர்கள் படுகாயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதால் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தாக்குதல் குறித்து எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

இரண்டாவது சம்பவமாக பழங்குடிகள் அதிகம் வசிக்கும் குர்ரம் பகுதியில் ஊராட்சி கூடத்தில் நடந்த கூட்டத்தில் பாடசாலை யாருக்கு சொந்தம் என்பது குறித்த விசாரணை நடந்தது. அப்போது ரிமோட் கன்ட்ரோல் மூலம் குண்டு வெடிக்கச் செய்யப்பட்டது. இந்த சம்பவத்தில் பாடசாலை ஆசிரியர் ஒருவர் உட்பட எட்டு பேர் உடல் சிதறி பலியாயினர். இந்தச் சம்பவத்துக்கு யாரும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. (6-2)

# கே.பி.க்கு எதிராக கருத்து வெளியிட்டவருக்கு பாதுகாப்புச் செயலாளர் கடும் கண்டனம்

(கொழும்பு)

அரசுடன் இணைந்து செயற்பட்டுவரும் விடுதலைப்புலிகளின் முன்னாள் முக்கிய உறுப்பினர் குமரன் பத்மநாதனுக்கு எதிராக கருத்து வெளியிட்ட ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளருக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருதாவது, விடுதலைப்புலிகளின் முன்னாள் முக்கிய பிரமுகருக்கு அரசு அதிக சுதந்திரங்களை வழங்கிவருவதாகக் கூறிய ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளரும், பேச்சாளருமான நிசந்தா சிறீ வர்ணசிங்கா தெரிவித்துள்ள கருத்துக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

அரசு கே.பிக்கு அதிக சுதந்திரத்தை வழங்கியுள்ள அதே சமயம், கைது செய்யப்பட்டுள்ள ஏனைய விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை தடுத்துவைத்துள்ளமை அதன் இரட்டை நிலைப்பாட்டை காட்டுவதாக நிசந்தா தெரிவித்துள்ளார்.

ஆனால் நிசந்தாவின் இந்த கருத்தை கட்சி அனுசரித்தால், ஹெல உறுமயவுடன் அரசுக்குள்ள உறவு குறித்து தாம் மீள் பரிசீலனை செய்யவேண்டி ஏற்படலாம் என கோத்தபாய, ஹெல உறுமய கட்சியின் செயலாளரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்கவுக்கு விடுத்துள்ள எச்சரிக்கையை தொடர்ந்து நிசந்தா தனது அறிக்கை தவறாக பிரசுரம் செய்யப்பட்டுள்ளதாக மறுப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# நான்கு மில்லியன் அமெரிக்க டொலர்களை கப்பமாகக் கோரும் கடற்கொள்ளையர்கள்

(கொழும்பு)

சோமாலியர்களால் கடத்தப்பட்ட இலங்கையர்களும் அடங்கிய கப்பலை விடுவிப்பதற்கு 4 மில்லியன் அமெரிக்க டொலர்களை கப்பமாக கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எகிப்திய செய்தித் தாளான அல்அஃராம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது . எம்.யூ.சி சென்ற கப்பல் ஓகஸ்ட் மாத ஆரம்பத்தில் கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தக்கப்பலில் 23 கப்பல் அதிகாரங்களுடன் 11 எகிப்திய ர்களும் இந்திய மற்றும் இலங்கை அதிகாரிகளும் தங்கியிருப்பதாக அந்த செய்தித்தாள் தெரிவித்துள்ளது. (6-4)

## UNIVERSITY OF JAFFNA
## TENDER NOTICE

**The Chairman, University procurement committee, university of Jaffna**
**Will receive sealed tenders from civil works contractors registered with ICTAD for the following works.**

| Work Details | Approximate Direct Construction cost (Rs.in mn) | Refundable deposit (Rs) | Non-refundable deposit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Raising up Boundary Wall at the Hostel in Jaffna Town, Univer sity of Jaffna | 1.3 | 13,000.00 | 400.00 | M8/C9 (Buildings) |
| Modification of one room in RAFA Hostel, Maruthanarmadam as Health centre, University of Jaffna | 1.0 | 10,000.00 | 400.00 | M8/C9 (Buildings) |

**Tender forms may be obtained form Senior Assistant Registrar/ Capiltal Works & Planning University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above tender fee at the Shroff's counter, University of Jaffna until 06.09.2010.**

**Perfected tender Should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.**

**Tenders will be accepted till 2.00 p.m on 09.09.2010 and open immediately thereafter.**

**Tenderers or their accredited representatives could be present at the time of opening of tenders.**


**Tender forms may be inspected by the Tenderers free of charge at the Capital Works & Planning Branch of this University during office hours, if necessary.**

**P.O Box 57,**
**Thirunelvely,**
**Jaffna.**
**23.08.2010**

Registrar
University of Jaffna

(C-932)

# நல்லூரான் திருவடிக்கு பதினோராம் திருவிழா




படங்கள் -அரவிந்

## துயர் துடைக்க வா முருகா

பொங்கி எழும் சரவணப் பொய்கையிலே பூத்தெழுந்த குமரா
அடியவர் துயர் துடைக்க அகிலத்தில் உதித்தனையே
கொடுமைகள் கொடூரங்கள் மலிந்து விட்ட இவ்வுலகில்
சூரனை அழித்த உன் வேல் எங்கே வேல் முருகா
எடுத்திடு வேலதனை அழித்திடு கொடுமைகளை
துடித்திடும் எம்மக்கள் துயர் துடைக்க வா முருகா
பொறுத்தது போதுமய்யா பொங்கி எழும் காலமய்யா
வகுத்திடு ஓர்வழியை வாழ்வதனில் ஒளியூட்ட
ஏறிவா மயில் மீதில் எங்களது நல்லூரா

ந.சக்தி வேல்
அச்சுவேலி வடக்கு

## உன்னருள் வேண்டி நிற்கிறேன்

அழகுத் தெய்வ வேலவனே
அறிவு ஒளி பெருக்கெடுக்க
ஆனை முகத்தின் தம்பியானவனே
இன்ப வாழ்வை அளித்திடவே
தரணியிலே எம்மை காத்திடவே
நல்லூர் கந்தனே உன் அருள்
வேண்டி நிற்கிறேன்

ஷோபா இராஜேந்திரம்
சாவகச்சேரி கிழக்கு

## நல்லூர் பதியில் விழாக்கோலம்

இலங்காபுரியின் சிரசதிலே
இலங்கும் நல்லூர் பதிதனிலே
விளங்கும் கந்தன் கோயிலிலே
வீதியெங்கும் விழாக்கோலம்

தில்லை ஆடும் நாயகனின்
திருமகன் குமரன் நல்லூரில்
தினமும் கலைகள் செழித்தோங்க
திக்குகள் வென்றான் விழாக்கோலம்

திருமதி. ஜெயக்குமாரி கந்தவேள்
கொக்குவில் கிழக்கு.

## தொல்லை வினையகற்றும் தோகை மயில் வீரா

நல்லை நகரை நாடி நலிந்து வருவோர்க்கு
தொல்லை வினையகற்றும் தோகை மயில் வீரா
சொல்ல முடியாத சோகந்தனைப் பெருக்கி
அல்லும் பகலுமெம்மை அலறவைப்பதேனோ ஐயா?
தெள்ளு தமிழ் மொழியின் தேர்ந்த கடவுள் நீயே
மெல்ல மெல்லத் தமிழர் மெலிந்து அழியலாமோ?
கொல்லும் நிலை வரினும் கோடலுற்று நிற்பவரை
வெல்லும் நிலை மிளிர சேர்த்துதவமாட்டாயா?

கவிமணி அன்னை தாஸன், ஊரெழு

வேலால் பகை ஒழித்த கந்தா
எம் துயர் துடைத்தருள்வாய்

ஈஸ்வர பகவான் அன் கம்பனி



இல.91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# சன் சீ கப்பலில் வந்த ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக கனடாவில் ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

அடைக்கல, தஞ்சம்கோரி கனடாவுக்கு வந்துள்ள மக்களை கனேடிய அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும் என தெரிவித்து கனடாவில் கடந்த21ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக கனடா தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த சனிக்கிழமை மாலை கனடாவின் யாற்ஸ் மற்றும் கவர்மன்ற வீதிகளில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தினால் இந்த வீதிகளில் போக்குவரத்துக்களும் தடைப்பட்டிருந்தன.

அடைக்கலத் தஞ்சம் கோரும் மக்களை நாம் ஏற்கவேண்டும் அகதிகளை நாம் உரிய மரியாதையுடன் நடத்த வேண்டும் அகதிகளின் உரிமைகளை மதிக்க வேண்டும் என்ற கோசங்களை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் எழுப்பியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை விக்கோரியா இனவாதத்திற்கு எதிரான வலையமைப்பு என்ற அமைப்பு ஒழுங்கு செய்திருந்தது.

கனடாவுக்குள் வரும் யாரும் சட்டவிரோதமானவர்கள் அல்ல என இந்த அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் உருளைக்கிழங்குக்கு வரி விதிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு கிலோ கிராம் உருளைக்கிழங்கு மீதும் 30 ரூபா வரியாக விதிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த வரிவிதிப்பை அமுல்ப்படுத்துமாறு நிதியமைச்சரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறைசேரிச் செயலாளருக்கு நேற்று முன்தினம் பணிப்புரை விடுத்துள்ளார்.

உள்ளூர் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களை ஜனாதிபதி நேற்று முன்தினம் கண்டியில் சந்தித்து கலந்துரையாடினார். இதன் போது உற்பத்தியாளர்கள் தமது குறை நிறைகளை ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

இதன் பின்னரே புதிய வரியை அமுல் படுத்துவதற்கான இறுதித் தீர்மானத்தை ஜனாதிபதி எடுத்துள்ளதாகவும் உள்நாட்டு உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதே இதன் நோக்கம் எனவும் ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய வரிவிதிப்புக்கு மேலதிகமாக மானிய விலையில் உரம் வழங்குதல் உட்பட மேலும் பல சலுகைகளை உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களுக்கு வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டதுடன் சந்தையில் உருளைக் கிழங்கு விலைகளில் திடீர் ஏற்ற இறக்கங்களும் ஏற்பட்டிருந்தன.

இலங்கையில் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் அதிகளவான உருளைக் கிழங்கு உற்பத்திசெய்யப்படுகின்ற நிலையில் பாகிஸ்தான், இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் இருந்தும் பெருமளவான உருளைக்கிழங்கு நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# ஆர்ப்பாட்டம் நடத்தியதாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு

(கொழுகும்பு)



கிழக்கில் உள்ள வேலையற்ற பட்டதாரி மாணவர்களுக்கு ஆதரவாக பேரணி நடத்தியதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி.அரியனேந்திரன் பி.செல்வராஜா எஸ்.யோகேஸ்வரன் நகரசபை தலைவர் துரைரத்தினம் மற்றும் வேலையற்றோர் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ஆகியோருக்கு எதிராக வழக்கு பதிவு செய்துள்ளனர்.

பொலிஸார் கடந்த 11ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்த பேரணிக்கு தேவையான அனுமதியை அவர்கள் பொலிஸாரிடம் இருந்து பெறவில்லை என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே அவசரகாலச் சட்டத்தில் உள்ள சில விதிமுறைகள் நீக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பேரணிகள் மேற்கொள்வற்கு அனுமதிகள் பெறத்தேவையில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் அரியனேந்திரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# அமெரிக்க சுற்றுலாத்துறையினர் வடகிழக்கு செல்ல அனுமதி மறுப்பு

(கொழும்பு)

இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக அமெரிக்காவில் இருந்து வந்துள்ள குழுவினர் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்படமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அமெரிக்காவுக்கான தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியாவின் ஏற்பாட்டில் அமெரிக்காவில் உள்ள முக்கிய துறைகளை சேர்ந்தவர்கள் தற்போது இலங்கைக்கு அழைத்துவரப் பட்டுள்ளனர்.

இவர்களுக்கு இந்திய தமிழர்கள் செறிந்து வாழும் மலையக தேயிலை தோட்டங்கள் உட்பட்ட சுற்றுலாமையங்கள் காண்பிக்கப் படவுள்ளன.

எனினும் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு அழைத்துச் சென்றால் அங்கு இன்னும் மாறாத நிலையில் உள்ள யுத்த வடுக்கள் சுற்றுலாத்துறையை பாதித்துவிடும் என்ற அடிப்படையிலேயே அமெரிக்க முக்கியஸ்தர்கள் வடக்கு கிழக்குக்கு அழைத்துச் செல்லப்படவில்லை என சந்தேகிக்கப்படுகிறது. (6-2)

# 25.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



## நிகழ்வுகள்

- ✠1580 - ஸ்பெயின் அல்காண்டரா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் போர்த்துக்கலை வென்றது.
- ✠1732 - யாழ்ப்பாணத் தளபதியாக கோல்ட்டெரஸ் வூல்ட்டெரஸ் நியமிக்கப்பட்டான்.
- ✠1758 - பிரஷ்யாவின் இரண்டாம் பிரெடெரிக் மன்னன் சோண்டோர்ஃப் என்ற இடத்தில் ரஷ்ய இராணுவத்தைத் தோற்கடித்தான்.
- ✠1768 -ஜேம்ஸ்குக் தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்தான்
- ✠1803 - யாழ்ப்பாணம் பனங்காமம் பற்று மன்னன் பண்டாரவன்னியன் விடத்தல் தீவைக் கைப்பற்ற எடுத்த முயற்சி மேஜர் வின்செண்ட் என்பவனால் முறியடிக்கப்பட்டது.
- ✠1825 - உருகுவே நாடு பிரேசிலிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- ✠1830 - பெல்ஜியப் புரட்சி ஆரம்பமானது.
- ✠1912 - சீனத் தேசியவாதிகளின் குவாமிங்தாங் கட்சி ஆரம்பிக்கப் பட்டது.
- ✠1920 - போலந்துக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் ஆகஸ்ட் 13 இல் ஆரம்பித்த போர் செம்படையினரின் தோல்வியுடன் முடிவுக்கு வந்தது.
- ✠1933 - சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் இடம்பெற்ற பெரும் நிலநடுக்கத்தில் 9ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- ✠1944 - இரண்டாம் உலகப் போர்: பாரிஸ் நாசி ஜெர்மனியிடம் இருந்து நட்பு நாடுகளால் விடுவிக்கப்பட்டது.
- ✠1955 - கடைசி சோவியத் படைகள் ஆஸ்திரியாவைவிட்டு வெளியேறின.
- ✠1981 - வொயேஜர் 2 விண்கலம் சனிக்கு மிகக்கிட்டவாகச்சென்றது.
- ✠1989 - வொயேஜர் 2 விண்கலம் நெப்டியூனுக்குக் கிட்டவாகச் சென்றது
- ✠1991 - சோவியத் ஒன்றியத்தில் இருந்து பெலருஸ் பிரிந்தது.
- ✠2003 - மும்பாயில் இரண்டு கார்க் குண்டுவெடிப்புகளில் 52 பேர் கொல்லப்பட்டனர்.
- ✠2007 - இந்தியா, ஐதராபாத் நகரில் இரண்டு வெவ்வேறு குண்டுவெடிப்பு நிகழ்வுகளில் 30 பேர் கொல்லப்பட்டு 50 பேருக்கு மேல் காயமடைந்தனர்.
- ✠2007 - கிறீசில் இடம்பெற்ற காட்டுத்தீயினால் 43 பேர் கொல்லப்பட் டனர்.


## பிறப்புகள்

- ✠1906 - திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் (இ. 1993)
- ✠1929 - எஸ்.வரலட்சுமி, தமிழ்த் திரைப்பட நடிகை, பாடகி
- ✠1962 - தஸ்லிமா நசுரீன், பங்காளதேஷ் எழுத்தாளர்.

## இறப்புகள்

- ✠1822 - வில்லியம் ஹேர்ச்செல், வானியலாளர் (பி. 1738)
- ✠1867 - மைக்கேல் பரடே, ஆங்கிலேய அறிவியலாளர் (பி. 1791)
- ✠1908 - ஹென்றி பெக்கெரல், பிரெஞ்சு இயற்பியலாளர் நோபல் பரிசு பெற்றவர் (பி.1852)
- ✠1976 - எல்விண்ட் ஜோன்சன்,சுவீடன் நாட்டு எழுத்தாளர்,நோபல் பரிசு பெற்றவர் (பி.1900)
- ✠2007 - தாதி பிரகாஷ்மணி, பிரம்ம குமாரிகள் அமைப்பின் தலைமை ராஜயோகினி
- ✠2008 - தா.இராமலிங்கம், ஈழத்துக் கவிஞர் (பி. 1933)
- ✠2009 - எட்வர்ட் கென்னடி, அமெரிக்க செனட்டர் (பி. 1932)

**1609 - இத்தாலிய வானியல் அறிஞர் கலிலியோ கலிலி தனது முதலாவது தொலைநோக்கியை அறிமுகப்படுத்தி னார்.**





பூநகரி சித்தங்குறிச்சியைச் சேர்ந்தவரும் தற்போது சுவிஸ்சர்லாந்தில் வாழ்பவருமான சின்னையா வசந்தி என்பவரால் அமைத்துக்கொடுக்கப்பட்ட பூநகரி சின்னத்தம்பிக் கல்விக்கூடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண சபையின் பிரதிப்பிரதம செயலாளர் ரி.இராசநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும் கல்விக்கூடத்திற்கான பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்வவதையும் கல்விக்கூடத்தை வசந்தியின் தாயாரான கணபதிப்பிள்ளை மகேஸ்வரி நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் பொலிஸ் அதிகாரி தெரதெனிய உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# வவுனியாவில் அனைத்துச் செய்கை நிலங்களிலும் பயிர்ச்செய்கை

(கொழும்பு)

நான்கு தசாப்தங்களுக்குப்பின்னர் இம்முறை காலபோகத்தின் வவுனியாப்பிரதேசத்தின் அனைத்துச் செய்கை நிலங்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளத்திட்ட மிட்டுள்ளது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் மாவட்டச் செயலக அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

வடபகுதியில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தல் மற்றும் அவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் ஆகிய வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

தரிசாகக் காணப்படும் வயல்களில் செய்கை மேற்கொள்வதற்காக கண்ணி வெடிகளை அகற்றுதல், காணிகளை தயார்ப் படுத்தல் மற்றும் நீர்ப்பாசன நிர்மாணங்கள் ஆகியவற்றை துரிதமாக நடைமுறைப்படுத்துவதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறினார்.

வடபகுதி மீள் குடியேற்ற நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியும் எனக் குறிப்பிட்ட அமைச்சர் ,வெளிநாட்டு உதவிகள் மற்றும் உள் நாட்டு வளங்களைப் பயன்படுத்திப் பிரதேச அபிவிருத்திகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். (6-2)

# அடுத்த கட்ட கடனுதவி இலங்கைக்கு வழங்கப்படும்

## சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

அடுத்த கட்ட கடனுதவி இலங்கைக்கு வழங்கப்படவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் செல்வதாகவும் இதனால் கடனுதவியை வழங்குவதில் சிக்கல் கிடையாது எனவும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். வரவு –செலவுத்திட்டத்தின் துண்டு விழும் தொகையை மொத்த தேசிய உற்பத்தியில் 8 வீதமாகப்பேணுவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் படி இலங்கைக்கு அடுத்த கட்ட கடனுதவியாக 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தில் உயர் அதிகாரி பிரயன் எட்கின் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நிலைமைகள் திருப்தி அளிக்கும் வகையில் காணப்படுவதாகவும் அடுத்த கட்ட கடனுதவி எதிர் வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்டோபர் மாதத்தில் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். 2.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் கோரியுள்ளதாகவும் இதுவரையில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

சர்வதேச அழுத்தம் காரணமாக இலங்கை மத்திய வங்கி வட்டி வீதங்களில் மாற்றம் கொண்டுவரவில்லை என சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. (6-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வன்னி

Botanical Name - Prosopis spicigera

Family - Leguminosae

பஞ்சதருக்கள் என்று சொல்லக்கூடிய தெய்வசக்தி மிகுந்த விருட்சங்களாகிய மா, வில்வம், வன்னி, மந்தாரை, பாதிரி ஆகியவைகளில் வன்னி மகத்துவம் வாய்ந்தது.மிகவும் அரிதாக காணப்படும் மரம்.

தன்னிச்சையாக வளர்வது அபூர்வம். இது பல நூற்றன்டுகள் வளரக்கூடியது. சிறிய அல்லது நடுத்தர உயரமுள்ளதுடன் மெல்லிய கிளைகள் விட்டிருக்கும். இதன் அடிமரம் சற்றே கருமை நிறமாகவும் கனத்தும், மேல் நோக்கி வளர்ந்து கிளைகளை விட்டு பின் சிறிய கிளைகள், கொடிபோல துவண்டு கீழே தொங்கும். சிறு காம்புகளில் முட்கள் நிறைந்திருக்கும். 12 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. இதன் பட்டை சாம்பல் நிறமாகவும், கரடுமுரடாகவும், மெல்லிய பிளவுகளை உடையதாகவும் காணப்படும். மிகச்சிறிய பசுமையான இலைகள் பசுமை நிறமாகக் காணப்படும். பூக்கள் சிறியவை மஞ்சள் நிறமாகக் காணப்படும். இதன் காய்கள் 10 - 25 செ.மீ X 5.10 மி.மீ அளவுடையதாக இருக்கும். ஒரு காயினுள் (Pod) 10 - 15 விதைகள் காணப்படும். இவ் உருவவியலைக் கொண்டதே தூயவன்னி இனமாகும். (Genune species) நாம் வன்னி மரம் என்று கூறுவது தூயவன்னி இனம் அல்ல. படத்தில் இரு இனங்களும் காட்டப்பட்டுள்ளது.

**இனவிருத்தியும், பரம்பலும்.**

இது வெப்பமான பிரதேசங்களில் பரம்பிக்காணப்படும் ஈரப்பிரதேசங்களில் (most places)_விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். வெப்பமான இடங்களில் வேர்கன்றுகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

*தூயவன்னி மரங்கள் யாழ்மாவட்டத்தில் நயினாதீவு நாகபூசணி அம்மன், சிக்கங் கேணி சிவன்கோவில், கைதடி வழிப்பிள்ளையார் (உட்புறம்) போன்ற ஒருசில இடங்களில் மட்டும் தான் பயிரப்பட்டுள்ளது. இம்மரம் விசேட மருத்துவ குணங்கள் கொண்டது.

**மருத்துவப் பயன்கள்.**

* வன்னிமரத்தின் (தூய) மீது பட்டுவரும் காற்றால் உடலிலுள்ள சர்வ விஷங்களும் அகலும்.

* இதன் இலை, காய், பட்டை இலை



களை சேகரித்து எடுத்து உலர்த்தி இடித்து, அரித்து பெறப்பட்ட தாளில் 1 – 2 கிராம் அளவு சுத்தமான தேனில் குழைத்து 6 வேளை இரண்டு நாட்கள் கெடுக்க விஷக்கடி, உணவு நஞ்சு ஆகியவை நீங்கும்.

* மேற்படி தூளில் 2 – 4 கிராம் அளவு வெந்நீரில் கொடுக்க சுரம் தணிந்து உடல் எரிச் சல் தணியும். குடற்புண்களையும் ஆற்றும்.

*மேற்படி தூளை தேங்காய் எண்ணெயுடன் கலந்து குழைத்து. சொறி, சிரங்கு, படைகளுக்கு போட்டு 1 - 2 கிராம் காலை, மாலை நெய்யுடன் கலந்து உட்கொள்ள மேற்படி நோய்நிலைமைகள் தீரும் 5 நாட்கள் தொடர்ந்து சாப்பிடலாம்.

* தூய வன்னி இனத்தின் இலைகளை மட்டும் நன்றாக கழுவி அரைத்து பசும்பாலில் சுண்டக்காயளவு தினம் இரண்டு வேளை மேற்கூறிய நோய்களுக்கு சாப்பிட்டு வரலாம்.

* மண் சட்டியில் வன்னிமரப் பட்டைத் தூளையிட்டு அதற்குள் கறியுப்பை வைத்து மண் சட்டியால் மூடி பின் பொருந்தும் பகுதியை சீலை மண் செய்து, உலர்த்தி, 30 எருவராட்டியில் புடம் போட்டு ஆறவிட்டு திறந்து பார்க்க கறியுப்பு நல்ல வெண்மையான நுண்ணிய பொடியாக காணப்படும். குடற்புண்களுக்கு இதில் 100 - 200 மி. கி தினம் 3 வேளை 5 நாட்கள் கொடுக்க குடற்புண் முற்றாக ஆறும்.

* இதன் முதிர்ந்த காய்த்தோலை 1 பங்கு எடுத்து 4பங்கு நீர்விட்டு $^{1}/_{4}$ பங்காக காய்ச்சி 30 – 60 மில்லி அளவு காலை, மாலை கொடுக்க உடம்பினுள் இருக்கும் எரிவு நீங்கி உடலை குளிர்ச்இதன் இலைச்சாறும், பசுவின் நெய்யும் ஒவ்வொன்றும் 340 கிறாம் ஒன்று கூட்டி இதில் வெண்குங்கிலியம் 80 கிராம் சேர்த்து எரித்துண்டாகும் நெய்யில் 15 கிராம் அளவு காலை, மாலை உட்கொண்டு வர வெள்ளை படுதல், தோல் நோய்கள் (சொறி, சிரங்கு, கரப்பான்) நீங்கும். அல்லது இந்நெய்யை காய்ச்சி எடுத்தவுடன் சுத்த நீரின் சேர்த்து மத்திட்டு கடைய வெண்ணெய் திரண்டு வரும். இதையும் 2 - 4 கிராம் வீதம் மேற்கண்ட நோய்களுக்கு வழங்கி வரலாம்.

குறிப்பு :- தூயவன்னி இனத்தில் பட்டைகள் இனிப்பாக இருக்கும். மருத்துவ குணங்களும் அதிகமாக இருக்கும். இதன் பட்டைகளை சேகரித்து ஒன்றாக உலர்த்தி, இடித்து, பொடித்து, அரித்தெடுத்த தூளில் 50 கிராம் அளவு சேர்த்து கோதுமை மா 250 கிராம் அளவு சேர்த்து இடியப்பம், பிட்டு, போன்றவற்றில் சேர்த்து பயன்படுத்தலாம். உடல் உஷ்ணத்தை நீக்கி, உடலை குளிர்ச்சியாக வைத்திருக்கும். அடிக்கடி காய்ச்சலினால் பாதிக்கப்படுபவர்கள் மேற்கூறிய முறையினைச் செய்து உணவாக பயன்படுத்தி பலன் பெறலாம். இவற்றிற்கு எல்லாம் முக்கிய காரணம் முதலில் உருவியல் ரீதியாக தூய வன்னி இனத்தை இனங்கண்டு கொள்ளுதலாகும். மக்கள் முக்கிய மூலிகைத் தாவரங்களை சரியாக இனங்கண்டு கொள்ளாததால் பல இனங்கள் அழிந்து கொண்டே போகின்றன. மூலிகைப்பயன்பாடும் அருகி, அழிந்து கொண்டே வருகிறது. இதனால் தான் என்னவோ தூய வன்னி இனங்களை புராதன ஆலயங்களில் மட்டும் காணக்கூடியதாக உள்ளது.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

# ஈழத்தவர் வரலாறு

15

## 3. ஈழராஜா எல்லாளன்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

3.2 துட்டகாமினி

எல்லாளனின் ஏகாதிபத்தியம் இலங்கை முழுவதும் பரவியிருந்தது. கல்யாணி, உருகுணை ஆகிய இரு தென்னிலங்கைச் சிற்றரசுகள் எல்லாளனின் ஆட்சியை ஏற்றிருந்தன. கல்யாணி இராசதானியின் மன்னனான களனிதீசனும், உருகுணையின் மன்னனான காக்கவண்ணதீசனும் எல்லாளனின் மேலாதிக்கத்தை ஏற்று திறை செலுத்தி வந்தனர். காக்க வண்ணதீசனின் அரசபரம்பரையை தேவநம்பியதீசனின் பரம்பரையோடு பிணைப்பதற்காகப் பாளிநூல்கள் முயல்கின்றன.

தேவநம்பிய தீசனின் சகோதரன் மகாநாகன் அனுராதபுரத்தின சிம்மாசனத்திற்குரிமையுடைய இளவரசனாவான். அனுராதபுரத்தின் மணிமகுடம் தனது கணவனுக்குப்பின்னர் தனது மகனுக்கு வரவேண்டும் என்று கருதிய தேவநம்பியதீசனின் மனைவி, நஞ்சூட்டப்பட்ட மாங்கனி ஒன்றினை மாங்கனிகள் நிரம்பிய தட்டொன்றில் மிக மேற்கனியாக அடுக்கி மகாநாகனுக்கு அனுப்பி வைத்தாள். அந்த நஞ்சூட்டப்பட்ட கனியை அவ்வேளை மகாநாகனோடு நின்றி ருந்த அவளது மகனே உண்டு இறக்க நேர்ந் தது. இந்தத் துர்மரணத்தினால் பயமுற்ற மகாநாகன் தனது மனைவி மக்களுடன் உருகுணைக்குத் தப்பியோட நேர்ந்தது அங்கு மகாகமம் என்ற நகரத்தை உருவாக்கி உருகுணையின் மன்னனாகினான். அவனைத் தொடர்ந்து அவனது மகன் ஜத்தலாயாதீசனும், அதன்பின் அவனது மகன் கோதபயனும் உருகுணையின் மன்னராகினர். இவர்கள் பெரும் போராட்டத்தின் பின்னரே உருகுணையின் அரசராக முடிந்தது. கதிர்காமப் பிரதேசத்தின் சத்திரிய தமிழ் மன்னர்கள் பத்துப்பேரை அழித்து வெற்றி கொள்ள வேண்டியிருந்தது. தட்டுவம்சம் என்ற நூலின்படி இந்த சத்திரிய மன்னர்களை கோதபயனே அழித்து வெற்றி கொண்டான் என்பதாகும். அனுராதபுரத்திலிருந்து தண்டனைக்குப் பயந்து தப்பியோடி வந்த மகாநாகனுக்குத் தஞ்சமளித்த கதிர்காமக் குறுநில மன்னன் கமணியையும், அவனது பத்துப்பிள்ளைகளையும் அழித்து உருகுணையின் இராசதானியைக் காக்க வண் ணதீசனின் தந்தை கோதபயன் தனதாக்கிக் கொண்டான். சத்திரிய மன்னர்கள் பத்துப் பேரையும் அழித்தபோதிலும், கதிர்காமப்பகுதியில் அவர்களது ஆதிக்கம் சிறிதளவில் இருந்துள்ளது. பத்துச் சத்திரிய மன்னர்களில் மூத்தவனின் மகாதீசன் என்பவன் இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் ஆதிக்கம் பெற்றிருந்துள்ளான். சத்திரிய மன்னன் ஒருவனின் மகளான இளவரசி அபி அனுரதி பற்றி பிராமிக் கல்வெட்டொன்றில் குறிப்புள்ளது.

எவ்வாறாயினும் தென்னிலங்கையில் காக்கவண்ணதீசனின் காலத்தில் உருகுணை ஓரளவு வலிமையுடைய இராசதானியாக விளங்கியுள்ளது. ஈழராஜா எல்லாளனின் மேலாதிக்கத்தையேற்று திறை செலுத்தி வந்தமையால், தமிழ் மன்னன் இதன் நிர்வாகத்தில் தலையீடு செய்யாதிருந்தான்.

காக்கவண்ணதீசனின் பட்டத்துராணி, களனிதீசனின் மகள் விகாரைமகாதேவியாவாள். இவளைக் காக்கவண்ணதீசன் மணந்த வரலாறு சுவையானது. களனி தீசனின் மனைவிக்கும், அவனது தம்பியான அய்ய உத்திகனுக்கும் கள்ளஉறவு இருந் தது. இந்த உறவு மன்னனுக்குத் தெரிந்ததும் உத்திகன் பயந்து நாட்டைவிட்டோடினான். பின்னர் தமையன் மனைவிக்கு ஒரு காதல் கடிதம் எழுதி, பிக்குவேடமணிந்த ஒருவனிடம் கையளித்து, அதனை அரசியிடம் சேர்ப்பிக்கும் மார்க்கத்தையும் கூறினான். ஒவ்வொரு நாளும் அரண்மனைக்குப் பிச்சையேற்கச் செல்லும் தேரர் பின்னால் செல்லும் பிக்குகளுடன் சென்ற பிக்குவேடமணிந்தவன், கடிதத்தை அரசியின் முன் தருணம் பார்த்து நழுவவிட்டபோது, அதனைக் கண்ணுற்ற களனிதீசன் கடிதத்தை எடுத்துப்படிக்க நேர்ந்தது. கோபமுற்ற மன்னன், பிரதம தேரர், வேடமணிந்த பிக்கு இருவரையும் கொன்று கடலில் வீசுவித்தான். அதனால், கடல் பொங்கிக் கல்யாணிமீது பரவியது. அதனைச் சாந்தப்படுத்துவதற்காகக் தனது மகள் மகாதேவியை ஒரு வள்ளத்தில் ஏற்றிக் கடலில் விட்டு கடலிற்குக் காணிக்கையாக்கினான். அந்த வள்ளம் மகாகமத்தின் கரையைச் சென்றடைந்தது. அவள் யாரெனக் கண்டுகொண்ட காக்கவண்ணதீசன், மகாதேவியைத் தனது பட்டத்துராணியாக்கிக் கொண்டான். அவள் கரையொதுங்கியவிடம் விகாரையொன்றுக்கு அருகாக இருந்தமையால், விகாரைமகாதேவி என அழைக்கப் பட்டாள். மகாவம்சம் கூறுகின்ற இக்கதைகள் எவ்வளவு தூரம் சிங்கள் இராஜபரம்பரைக்குப் பெருமை சேர்க்கின்றதோ அல்லது அபகீர்த்தியுண்டாக்குகின்றதோ என்பதை விட, இக்கதைகளின் நம்பகத்தன்மை நிரூபிக்கப்படாத ஒன்று.

மகாவம்சத்தின் ஆசிரியரான மகாநாம தேரர் , துட்டகாமினியை தனது நூலின் பாட்டுடை தலைவனாகக் கொண்டுள்ளார். அவனது வரலாற்றை விபரிக்கும் போது இரு அம்சங்களை வலியுறுத்தியுள்ளார். ஒன்று தமிழருக்கு எதிரான இனவாத கருத்துக்கள் , மற்றையது பௌத்தத்திற்கு அவனாற்றிய சேவை. விகாரை மகா தேவி துட்டகாமினியை கருவில் கொண்டிருந்த போது அவளுக்கு ஏற்பட்ட ஆசைகள் பற்றி மகாவம்சம் விபரிக் கின்றது.

பெரும் தொகையான பிக்குகளுக்கும். வழங்கி தானும் பருகக்கூடிய பெரியதொரு தேன்னடை வேண்டும் என்பது அவளது முதல் ஆசை. ஈழ ராஜா எல்லாளனின் முதலாவது படைத் தளபதி ஒருவனின் தலையை சீவிய இரத்தம் தோய்ந்த வாளினைக்



துட்டகாமினி

கழுவிய நீரை அருந்த வேண்டும் என்பது அவளது இரண்டாவது ஆசை அநுராத புரத்தின் வாடாத தாமரைகளால் மாலை கட்டி அணிய வேண்டும் என்பது அவளது மூன்றாவது ஆசை. இந்த மசக்கை ஆசைகள் நிறைவேற்றப்பட்டன.

காக்க வண்ண தீசனின் நம்பிக்கைக் குறிய படைத் தளபதி வேலு சுமண என்பவன் விகாரமகாதேவியின் இரண்டாவது விருப்பத்தை நிறைவேற்ற அநுராதபுரத்திற்கு


கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

அனுப்பப்பட்டான். அவன் தனது வாளினை கதம்ப நதிக்கரையில் மறைத்து விட்டு அரண்மனைக்குச் சென்று குதிரைகளை பராமரிக்கும் பணியில் சேர்ந்து கொண்டான். ஒருநாள் வாகா என்ற அரச குதிரையை பிறர் அறியத் தக்கதாக கடத்திக் கொண்டு புறப்பட்டான். இதனையறிந்த எல்லாளனின் படைத் தளபதி நந்தசாரதி அவனைக் கைப்பற்ற கருதி தனது குதிரையில் வேகமாக விரைந்தான். காட்டிற்குள் மறைந்து நின்ற வேலுசுமண , நந்தசாரதியின் தலையுடன் இரத்தம் தோய்ந்த வாளை உருகுணைக்கு எடுத்துவந்து விகாரமகாதேவியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தான்.


(தொடரும்)

# பல மொழிகளுக்கு தமிழே மூல வரிவடிவம்

4



கி.மு.1500 இன் இறுதியிலிருந்த சித்திரவெழுத்து கி.மு 500 ஆண்டுகளில் தமிழ் பிராமியாக பரிணாம வளர்ச்சி பெற்று தொடர்ந்து கி.பி 200 இலிருந்து பரிணாம வளர்ச்சி பெற்று கி.பி 400 ஆண்டளவில் வட்டெழுத்தாக மாற்றம் பெற்று மேலும் வளர்ச்சி



யடைந்த நிலையிலேயே இன்றைய வரி வடிவத்தின் பரிணாம வளர்ச்சியாகும்.

சிந்துவெளி சிந்திர வரிவடிவிலிருந்து தமிழ் அகரத்தின் பரிணாம வளர்ச்சியும் அசோகன் பிராமிக்கு அது எவ்வாறாக வித்திட்டது என்ப தனை கீழே நோக்கவும்.

1. கி.மு 6000-கிமு.1500 வரையான சிந்துவெளி அகரத்தின் சித்திர வரிவடிவம்
2. சித்திர வரிவடிவத்தின் தொடர்ச்சியான அகர பரிணாம வளர்ச்சி
3. கி.மு. 5 ஆம் நூற்றாண்டிற்கு முந்திய அகரத்தின் பரிணாமம்
4. கி.மு 5 ஆம் நூற்றாண்டின் தமிழ் பிராமி (தமிழி)
5. அகரத்தின் அடுத்தான பரிணாமம்.
6. தற்போதைய அகரத்தினை அண்டிவிட்ட அ
7. தற்போதைய நவீன அகரத்திற்கு முந்திய அகர தோற்றம்.
8. கி.பி 4 ஆம் நூற்றாண்டிகத் தோன்றும் பெற்ற வட்டெழுத்தான நவீன அக்ரம்



மேலே காணப்படுவதே அசோகன் பிராமி இதன் தோற்றம். கி.மு 3 ஆம் நூற்றாண்டு. தமிழ் பிராமியின் காலம் கி.மு.5 ஆம் நூற்றாண்டாகும். ஆகவே தமிழ் பிராமியிலிருந்தே தோற்றத்தின் அடிப்படையிலும் காலத்தின் அடிப்படையிலும் வரிவடிவத்தின் அடிப்படையிலும் தமிழ் பிராமியே முந்தியது. அத்தோடு அதன் பிரதிமையே அசோகன் பிராமியாகும். ஆகவே அதன் வழிவந்த வட மொழிகள் அத்தனையும் தமிழ் பிராமி வழிவந்ததென்றே கொள்ளவேண்டும்.

| தமிழ்உயிர் எழுத்து | சிந்துவெளி சித்திர எழு த்து இல | தமிழ் மெய் எழுத்து | சிந்துவெளி சித்திர எழுத்து இல |
|---|---|---|---|
| அ | 1 | க | 15 |
| ஆ | 2 | ங | |
| இ | 57+225 | ச | |
| ஈ | 58+225+225 | ஞ | |
| உ | 12+49 | ட | |
| ஊ | 13 | ண | 320+403 |
| எ | 319 | த | 25 |
| ஏ | 320 | ந | |
| ஐ | பொத்திய கை | ப | 328 |
| ஒ | 321 | ம | |
| ஓ | 322 | ய | |
| ஔ | 321+ | ர | |
| ஃ | 2 3 3 - ஈ ல மை ட் | ல | |
| | இல.39 | வ | |
| | | ழ | |
| | | ள | |
| | | ற | 83 |
| | | ன | 320+ |

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

தமிழ் அகர வரிசையில் உள்ள அ வும் ஆ என்ற வரிவடிவத்தினைப் போன்ற சாயலுடனேயே சமஸ்கிரு அ. ஆ. ஆகிய இரண்டு எழுத்துக்களும் அமைந்தன. அ விற்கு மேலே சுழியிட்டு பின் அதற்குக் கீழே ஒரு வண்டியிட்டு பிற்பகுதியில் ஒரு கோட்டினை இட்டு முடிப்பதே தமிழ் அகரமாகும். இதே எழுத்து முறையினைப் பின்பற்றியே கீழே குறிப்பிட்ட கால வரிசைப்படி தோன்றிய பல இந்திய மொழிகளின் எழுத்து வரிவடிவங்கள் தோற்றம் பெற்றன. திராவிட மொழிகளிலோ அன்றி ஆரிய மொழிகளிலோ அந்தந்த

முருகேசு பாக்கியநாதன் B.A

மொழிகளின் வரிவடிவங்கள் தமிழ் வரி வடிவத்தின் சாயலை அடியொற்றியே அமைக்கப் பெற்றன.

தெலுங்கும் கன்னடமும் தமிழ் அ வரி வடிவத்தை தலை கீழாக போட்டு எழுதியிருப்பதனை அவதானிக்க முடியும். அதிலும் ஒரு வட்டம். ஒரு வண்டி மற்றும் ஒரு கோட்டுடனேயே அகரம் அமைக்கப்பட்டுள்ளது. கீழே காணப்படும் பட்டியலின் வரிவடிவங்களை நோக்கின் உயிர் எழுத்துக்களின் தொடர்பு பற்றி ஒரு முடிவிற்கு வர முடியும்.

(தொடரும்)

# இருபதாம் நூற்றாண்டு இலங்கை கல்வியில் அரசியல் அழுத்தங்கள்

## இலங்கையின் கல்வி வளர்ச்சிப் போக்குகள்

ஆரம்பப் பாடசாலை இடைநிலைப் பாடசாலை மேலதிக கல்வி என மூன்று பருவங்களாகப் பிரிக்கப்பட்டன. ஆரம்பக் கல்வியின் குறிக்கோள் சகல பிள்ளைகளுக்கும் பரந்த அளவிலான பொதுக் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதாகும். இடைநிலைக் கல்விப் பிள்ளைகளின் விருப்பிற்கும் திறமைக்கும் ஏற்ப அவர்களின் ஆளுமையும் தலைமைத்துவத்தையும் வளர்ச்சி யடையச் செய்வதற்கும் ஏற்ப தொழில் சார்திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு உரிய பயிற்சியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் வழங்கப்படுவதாகும். மேலதிக கல்வியின் நோக்கம் ஆரம்பக் கல்வியின் இறுதியில் தொழில்களை நாடிச் சென்றுள்ள பிள்ளைகளின் ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கும், தொழில் சார் திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கும் உதவுவதேயாகும். 6 – 14 வயது வரையுள்ள பிள்ளைகளுக்கு கனிஷ்ட பாடசாலைகளிலேயே கல்வி வழங்கப்பட வேண்டியிருந்தமையும் 8ஆம் வகுப்பு வரை மட்டும் வகுப்புக்கள் இருந்த கனிஷ்ட பாடசாலைகளில் கல்வி முடிவில் தெரிவுக்கான பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்படுவர். பரீட்சையில் காட்டும் தகைமைக்கேற்ப இடை நிலைகல்வி பெறுவதற்காக நான்கு துறைகளில் நான்கு பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவர் அவை பின் வருமாறு.

1. மாவட்ட செய்முறைப் பாடசாலைகள்
2. கனிஷ்ட தொழிநுட்பப் பாடசாலைகள்
3. கனிஷ்ட பாடசாலைகள்
4. சிரேஷ்ட பாடசாலைகள்

இம்முறையின் படி சிரேஷ்ட பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்படும் ஒரு சிலருக்கு மட்டுமே பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு இருக்கும் அத்துடன் அதற்கு குறைந்த தரத்தில் உள்ளவர்கள் தொழில்களை மையமாகக் கொண்டு நடத்தப்படும் கனிஷ்ட பல்கலைகக்கழகங்களிலும் ஆசிரியர் கல்லூரிகளிலும் அனுமதி பெற்றுக் கொள்ள முடியுமெனக் குறிப்பிடப் பட்டுள்ளது. மற்றும் மாணவர்கள் தெரிவு முறை தொழில் பயிற்சி முறையினால் ஏற்பட க்கூடிய சமூக வகுப்பு வேற்றுமைகள், நல்ல பாடசாலைகளில் சேர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்ப மறுப்பு கிராம, நகரப்பிள்ளைகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகள் பாட ஏற்பாடுகளில் காணப்பட்ட வித்தியாசமாகிய காரணங் களில் இவ்அறிக்கையின் கருத்துக்கள் பற்றிய முரண்பாடுகள் தோன்றின. எனவே கல்விக் கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்த அரசும் பல்வேறு ஆணைக் குழுக்களின், மூலம் அறிக்கைகளை வெளியிட்டமையை கல்வி வரலாற்றூடாக அறியமுடிகின்றது.

ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக உயர்கல்வியில் பங்குபற்றுவோர் தொகையில் அதிகரிப்பினை ஏற்படுத்தியது. இதன் விளைவாக உயர்கல்வியிலும் மாற்றங்களை செய்ய வேண்டிய தேவை அரசுக்குஏற்பட்டது. 1967 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழத்தின் கொழும்புப் பிரிவாக இயங்கிய கொழும்புப் பல்கலைக் கழகம் சுதந்திரமுடையதாக்கப்பட்டது. இவ்வாண்டிலேயே மொரட்டுவையில் உள்ள கட்டுப்பத்தையில் உயர்தர தொழில்நுட்பவியல் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. 1966 ஆம் வருட 20 ஆம் இலக்கமுள்ள கட்டளைச் சட்டத்தையும், 1958 ஆம் வருட 45 இலக்கம் உள்ள சட்டத்தையும் நீக்கி விட்டது. அத்துடன் உயர்கல்விக்கான தேசிய சபையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. இச்சட்டமே பல்கலைக் கழகங்கள் மீது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வருவதற்கு உத்தியோக பூர்வமாக ஏற்பாடு செய்தமை குறிப்பிடத் தக்கதாகும். எனவே உயர்கல்விக் கொள்கையில் அரசு தலையிடுவதற்கு மூலகாரணமாக இச் சட்டம் அமைந்தது. இச்சட்டத்தின் கீழ் வந்த வித்தியோதைய, வித்தியலங்கார பல்கலைக் கழகங்கள் நவீன சமயச் சார்பற்ற பல்கலைக் கழகங்களாக மாற்றப்பட்டன. தொடர்ந்து வரும் காலப்பகுதிகளில் உயர் கல்வியைத் தொடரும் அதிகரித்தவிடத்து நாட்டில் மேலும் பல்கலைக்கழகங்களை நிறுவ வேண்டிய சூழ்நிலை அரசுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக உயர் கல்வியில் அரசின் அழுத்தங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு இது வரைக்கும் ஒரு சில அரசாங்கங்கள் தோன்றி மறைந்துள்ளன. அவை தோல்வியுற, புதிய அரசாங்கங்கள் வந்தன. அந்த அரசாங்கங்கள் யாவற்றின் கீழும் இயங்கிய கல்வியமைச்சுக்கள் யாவும் நாட்டின் கல்வித் துறையை பரிபூரணமாக மாற்றியமைக்க பெரும் முயற்சிகள் மேற்கொண்டன. இம் முயற்சிகளின் நோக்கம் பொருத்தமாக நாட்டுக்கு உகந்த கல்வியை உருவாக்குவதே ஆயினும் இடையறாது மாறிக் கொண்டிருக்கும் சமுதாயத்தில் எழும் பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வுகாணும் கல்வி முறை இது வரை தோன்றியுள்ளதாக தெரிய வில்லை. கல்வித்துறை முழுவதையும் திருத்தியமைக்கும் புதியகல்வித் திட்டத்தை முன்வைப் பதற்கு கல்வியமைச்சு துணிந்தமைக்கு காரணம் இதுவே ஆகும் எனக் கூறப்பட்டுள்ளது. 1972 ஆம் ஆண்டில் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் சுதந்திரமும் இறைமையும் கொண்ட ஒரு நாட்டின் தேவைக்கு உதவும் நோக்கினை அடிப்படையாகக் கொண்டது. இக்காலத் தில் ஏற்பட்ட பொருளாதார அரசியல் பிரச்சினைகளுக்கு, முன்னைய கல்வி அமைப்புக்களில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மைகளே காரணங்களாக கூறப்பட்டன. புதிய பாட ஏற்பாட்டில் மாற்றங்களையும் புதிய பாடசாலை அமைப்பையும் கருத்திற்கொண்டு புதிய சீர்திருத்தம் அரசினால் முன்வைக்கப் பட்டது. முன்னைய கல்வி வெள்ளை அறிக்கைகளும் குறிப்பாக இவ்வறிக்கைகளிலே இடம்பெற்ற பாடஏற்பாடுகளும் வேறுபடுத்தப் பட்டனவாக இருந்தமையால் மாணவர்கள் மற்றும் சமூக எதிர்பார்ப்புக்களில் உறுதியற்ற நிலையில் இருந்தது. அத்துடன் சமூக வகுப்பு பேதங்களை அவை மேலும் வலியுறுத்தின. பாடசாலைகளுக்கிடையே வசதிவாய்ப்புக்களில் வேறுபாடுகள் தோன்றின. ஆகவே புதிய சீர்திருத்தம் யாவருக்கும் பொதுக் கல்வி முறையை அறிமுகம் செய்வதை அடிப்படையாகக் கொண்டமையலாயிற்று 1972 ஆம் ஆண்டில் குடியரசாகமாறிய இலங்கை நாட்டு மக்களின் பொருளாதார கலாசார புத்துயிர்ப்பை கருத்தில் கொண்டு ஐந்தாண்டுத்திட்டத்தை தயாரித்தது. 1972 ஆம் இருந்து அடுத்த ஐந்தாண்டுகளில் கல்வியின் திட்டம் பின்வரும் அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளித்தது.

1. கல்வி நிலைமையில் எதிர்நோக்கப் படும் மாற்றங்களுக்கு வேண்டிய பாடவிதான அபிவிருத்தி.
2. நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளை தரம் உயர்த்துதல்.
3. நாட்டின் அபிவிருத்தி தேவைகளுக்கு ஏற்ப பிரயோகக்கல்விக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் உயர் கல்வியைப் பன்முகப் படுத்தி விரிவாக்குதல்.

எனவே புதியகல்வித்திட்டமூலம் கனிஷ்ட இடைநிலைக் கல்வி மாற்றத்திற்கு உட்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சாதாரண பாடசாலைகளில் இடம்பெறவுள்ள புதுக் கல்வி மூன்று பிரதான படிப்பு நிலைகளில் அமையும்.

1. 1 முதல் 5 வரையான வகுப்புக்களிலான தொடக்கக் கல்வி.
2. 6 முதல் 9 வரையான வகுப்புக்களிலான கனிஷ்ட இடைநிலைக்கல்வி
3. 10 முதல் 11 வரையான வகுப்புக்களிலான சிரேஷ்ட இடைநிலைக்கல்வி.

(தொடரும்)

நாகேஸ்வரி விஜயகாந்தன்

## கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் கையளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு நீர் இணைப்பு இயந்திரங்கள் மற்றும் அதற்கு தேவையான குழாய் என்பன பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தினரால் கையளிக்கப்பட்டது. அத்துடன் கைவிடப்பட்டு பழுதடைந்த நீர் இறைப்பு இயந்திரங்களும் இப்பணிமனையினால் திருத்தி வழங்கப்படுகிறது.

அந்த வகையில் கிளிநொச்சி மேற்கு பகுதியில் 30 புதிய நீர் இணைப்பு இயந்திரங்களும் 15 பழைய நீர் இறைப்பு இயந்திரங்களும் வழங்கப்பட்டன. அத்துடன் புளியங்பொக்கணைப்பகுதியில் 55 புதிய நீர் இறைப்பு இயந்திரங்களும் 27 பழைய நீர் இறைப்பு இயந்திரங்களும், அக்கராயன் குளம் பகுதியில் 25 புதிய நீர் இறைப்பு இயந்திரங்களும் 17 பழைய நீர் இறைப்பு இயந்திரங்களும், உருத்திர புரம் பகுதியில் 30 புதிய நீர் இறைப்பு இயந்திரங்களும், 16 பழைய நீர்இறைப்பு இயந்திரங்களும், கனகபுரம் பகுதியில் 10 புதிய நீர் இறைப்பு இயந்திரங்களும் 8 பழைய நீர் இறைப்பு இயந்திரங்களும், ராமநாதபுரம் பகுதியில் 15 புதிய நீர் இறைப்பு இயந்திரங்களும், 20 பழைய நீர் இறைப்பு இயந்திரங்களும், கிளிநொச்சி கிழக்குப் பகுதியில் 30 புதிய நீர் இறைப்பு இயந்திரங்களும், 5 பழைய நீர் இறைப்பு இயந்திரங்களும், பூநகரி பகுதியில் 20 புதிய நீர் இறைப்பு இயந்திரங்களும் 15 பழைய நீர் இறைப்பு இயந்திரங்களும், முழங்காவில் பகுதியில் 10 புதிய நீர் இறைப்பு இயந்திரங்களும் 35 பழைய நீர் இறைப்பு இயந்திரங்களும், பளைப் பகுதியில் 25 புதிய நீர் இறைப்பு இயந்திரங்களும் 16 பழைய நீர் இறைப்பு இயந்திரங்களும் மற்றும் பிடுவையாறு பகுதியில் 26 பழைய நீர் இறைப்பு இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

மேலும் இவ்விவசாயிகளுக்கு மண் வெட்டி மற்றும் பூவாளி என்பனவும் இத் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ள தென பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித் துள்ளார். (6)

## 674 மில். பெறுமதியான உபகரணங்கள் இலங்கை விமானப்படைக்கு அன்பளிப்பு

அமெரிக்கா 674மில்லியன் பெறுமதி யான உபகரணங்களை இலங்கை விமானப் படையினருக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரத்மலானை விமானப் படைத்தளத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது இந்த உபகரணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க தூதுவராலய அதிகாரிகள் இலங்கை விமானப் படை அதிகாரிகள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இயற்கை அனர்த்தங்களின் போது பயன் படுத்தக் கூடிய சில முக்கிய இயந்திர சாதனங்களை அமெரிக்கா, இலங்கைக் கடற்படையினருக்கு வழங்கியுள்ளது. (6)

## இவ்வருடம் பொருளாதார வளர்ச்சி 7.2 வீதமாக அதிகரிக்கும் சாத்தியம்

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

இவ்வருடத்தில் 7.2 என்ற விகிதத்தில் பொருளாதார வளர்ச்சி வேகத்தை எதிர் பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் மகாவலி அபிவிருத்தி திட்டத்திற்கு முதலீடு செய்யப்பட்ட நிதியைப் போன்று 5 மடங்கு நிதி தற்போது முன்னெடுக்கப்படும் அபிவிரு த்தித் திட்டங்களுக்கென முதலீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். கடுகதி வீதிகள் மற்றும் மின்சார நிலையங்கள் என்பன தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. கையடக்கத் தொலைபேசியின் பாவனைகளும் அதிகரித்துள்ளன.

அத்துடன் 10 நிமிடத்திற்கு ஒரு தடவை முச்சக்கரவண்டி ஒன்று விற்பனை செய்யப்படுகின்றது. இவை அனைத்தும் நாட்டின் பொருளா தார அபிவிருத்தியின் அறிகுறிகள் என்றும் அவர் கூறினார்.

மேலும் கொழும்புப் பங்குச் சந்தை உலகின் மிகச் சிறந்த பங்குச் சந்தையாக மாற்றம் கண்டிருப்பதாக மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன் நாட்டின் தங்கத்தின் ஒதுக்கமும் அதிகரித்துள்ளது எனவும் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் தாமாகவே எழுந்து நிற்கக் கூடிய வல்லமைக்கான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்றும் ஆளுநர் தெரிவித்தார். (6)

## அனுமதி அட்டை வழங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்வி கற்கும் 2011 ஆம் ஆண்டு க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தகவல் தொழில் நுட்ப பரீட்சையின் அனுமதி அட்டைகள் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் வைத்து வழங்கப்படுமென அதிபர் அ.கைலாயபிள்ளை அறிவித்துள்ளார். (6-2-29)

## அடைக்கல மாதா ஆலய பெருவிழா

(ஊர்காவற்றுறை)

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள தூய அடைக்கல அன்னை ஆலய வருடாந்த பெருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கள் கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலை 4.30 மணிக்கு செபமாலை பிரார்த்தனை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இதில் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி புதன் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் திருநாள் கூட்டுத்திருப்பலி நடைபெறவுள்ளது. (4-72)



காரைநகர் மக்களின் குடிநீர் பயன்பாட்டிற்கென பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தினால் தண்ணீர் பௌசர் அன்பளிப்பு செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் காரைநகர் மடத்துக்கரை அம்பாள் ஆலய முன்றலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் புதிய தண்ணீர் பௌசருக்கு பூசை வழிபாடு நடைபெறுவதனையும் லண்டன் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள் காரைநகர் குடிநீர் பொறுப்பாளர் வே.நடராசாவிடம் ஆவணங்களை ஒப்படைப்பதனையும் காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன், தொழிலதிபர் இ.எஸ்.பி.நாகரத்தினம்,லண்டன் பிரதிநிதிகள் எஸ்.நடராசா,இ.சுந்தரதாஸன் ஆகியோர் உரையாற்றுவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொள்கிறதா?

## அரசாங்கம் கேள்வி

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத்திட்டம் குறித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொள்கின்றதா என அரசாங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

சலுகைத் திட்டத்தை நீடிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்ட 15 நிபந்தனைகளையும் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொள்கின்றதா? அல்லது நிராகரிக்கின்றதா அவ்வாறு நிராகரித்தால் அதற்கான காரணம் என்ன என்பதனை தெளிவுபடுத்த வேண்டுமென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக சகல எதிர்க்கட்சிகளும் அணி திரள வேண்டும் என கரு ஜெயசூரிய கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அதற்கு முன்னர் ஐக்கிய தேசியக்கட்சிக்குள் இணக்கப்பாட்டை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வி, சுகாதாரம், ஆயுட்காலம், சமூக நலத் திட்டங்கள் போன்றவற்றின் அடிப்படையில் உலக நாடுகளை நியூஸ்விக் சஞ்சிகை வரிசைப்படுத்தியுள்ளதாகவும் இதில் இலங்கைக்கு 66 ஆவது இடம் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் துரித அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்துள்ளதாகவும் 2015ஆம் ஆண்டளவில் தேசிய வருமானத்தை தலா நான்காயிரம் அமெரிக்க டெலர்களாக உயர்த்த முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இராணுவத்தினரால் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதனை ஜீரணிக்க முடியாத சில தரப்பினர் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் புலம்பெயர் தமிழர்களின் ஒரு பகுதியினர் ஆகியோரினால் மேற்கொள்ளப் பட்டு வரும் போலி பிரசாரங்களினால் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத்திட்டத்தை இழக்க நேரிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6-2)

## நூல் வெளியீட்டு விழா

(உடுப்பிட்டி)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவையினால் மாதாந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் 152 ஆவது மலரான ஆவணி மாத மலர் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டு உரையை ஆசிரியர் இரா. சிறிநடராஜா வழங்கவுள்ளதுடன் மதிப்பீட்டு உரையை க.நடேசு (தெணியான்) வழங்கவுள்ளார்.

தொடர்ந்து லண்டன் நாதவித்தியாலய மாணவர்களான செல்வி சகானா சாந்தகுணம் (வயலின்), செல்வன் சேயோன் சஜுந்தகுணம் (மிருதங்கம்) ஆகியோர் வழங்கும் வாத்திய இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன.(4-2)

# வீட்டுப் பணிப்பெண்ணின் உடலில் 24 ஆணிகளை அடித்து இலங்கைக்குத் திருப்பியனுப்பிய எஜமான்

(கொழும்பு)

சவூதி அரேபியாவில் வீட்டுப்பணிப் பெண்ணாக பணியாற்றிய இலங்கைப் பெண் ஒருவர் மீது வீட்டு எஜமான் பெண்ணின் உடல் ஆணிகளை அடித்து அவரை இலங்கை திருப்பி அனுப்பியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் உடலில் 24 ஆணிகள் காணப்படுவதாக மாத்தறை கம்புறுப் பிட்டிய வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

தியாகொட பிரதேசத்தை வசிப்பிடமாக கொண்ட மூன்று பிள்ளைகளின் தாயான 49 வயதுடைய என்.பி ஆரியவதி என்ற பெண்மணியே இந்த சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளார்.

வீட்டில் உள்ளவர்களினால் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக தன்னை இலங்கைக்கு திருப்பி அனுப்புமாறு அழுத்தம் கொடுத்ததால் வீட்டின் உரிமையாளர் பல அளவிலான ஆணிகளைத் தனது உடலில் அடித்து தன்னை சித்திரவதை செய்து இலங்கைக்கு திருப்பி அனுப்பியதாக ஆரியவதி குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பெண்ணின் உடலில் இரண்டு அங்குல நீளமான ஆணிகளும் சட்டைப்பின் அளவிலான ஆணிகளும் காணப்படுவதாக கம்புறுப்பிட்டி வைத்தியசாலையின் பணிப்பாளர் பிரபாத் கஜதீர தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. எனினும் சில இடங்களில் அடிக்கப்பட்டிருக்கும் ஆணிகளை சத்திர சிகிச்சை மூலமும் அகற்றுவது சிரமமானது என பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

சத்திர சிகிச்சை மூலம் அகற்றக்கூடிய அனைத்து ஆணிகளும் அகற்றப்பட்ட பின்னர் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை என்ன என்பது குறித்து சத்திர சிகிச்சை மருத்துவர் கமல் வீரசிங்க தீர்மானிப்பார் எனவும் கஜதீர கூறியுள்ளார்.

சவூதி அரேபியாவிற்கு தொழிலுக்காகச் சென்ற நிலையில் இப்படியான சித்திரவதைக்குள்ளான எம்.பி ஆரியவதி என்ற பெண்மணி தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் சவூதியில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அறிவித்திருப்பதாக பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

தான் பணியாற்றிய வீட்டில் எஜமானினால் தாக்கப்பட்டு உடலில் ஆணி அடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட பெண் ணுக்கு இந்த சந்தர்ப்பத்தில் தேவையான சகல தேவைகளையும் பெற்றுக் கொடுக்க பணியகம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

இதனைத்தவிர பணியகம் காப்புறுதி இழப்பீட்டுப் பணத்தைப் பெற்றுக் கொடுத்ததுடன் விமானப் பயணச்சீட்டிற்கு செலவிடப்பட்ட பணத்தையும் வழங்க நடவடிக்கை எடுத்துவருவதாகவும் கூறியுள்ளார். (6-2)

# அமெ- இலங்கை விமானப்படைகள் இணைந்து கூட்டு ரோந்துப்பணி

(கொழும்பு)

இலங்கைவான் பரப்பில் அமெரிக்க விமானப்படையுடன் இணைந்து கூட்டு ரோந்துப் பணிகளில் ஈடுபட இலங்கை விமானப்படை தீர்மானித்துள்ளது.

விசேடமாக இலங்கை கடற்பரப்பின் மேலான கண்காணிப்புப் பணிகளிலேயே அமெரிக்க விமானப்படையினரின் சேவை பெறப்படவுள்ளது.

இத்தகவல்களை இலங்கையின் விமானப்படைத்தளபதி ரொசான் குணதிலக தெரிவித்துள்ளார்.

இரத்மலானையில் இடம்பெற்ற விமானப் படை விருது வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். (6-2)

# கெயார் நிறுவனத்தின் நிதியுதவியுடன் சுயதொழில் ஊக்குவிப்பு உதவிகள்

(பூநகரி)

ஜெயபுரம் பிரதேசத்தில் உள்ள குடும்பங்களுக்கு கெயார் நிறுவன உதவித் திட்டத்தின் கீழ் சுய தொழிலை ஊக்குவிப்பதற்காக பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டது.

இதில் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட எட்டு குடும்பங்களுக்கு தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.

மேற்குறித்த பயனாளிகளில் 13 பேருக்கு சிறுகைத்தொழில் மேம்பாட்டுக்காக ஆரம்பக் கட்ட உதவியாக தலா 30 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டது.

ஏனைய அனைவருக்கும் படிப்படியாக இவ்வுதவிகள் வழங்கப்படுமென திட்ட முகாமையாளரினால் தெரிவிக்கப்பட்டது.

ஜெயபுரம் பிரதேச உப அலுவலகத்தில் கிராம சேவையாளர் கொ.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு கொழும்பு கெயார் ஸ்தாபனத்தின் திட்டமுகாமையாளர் மைத்திரி அபயவர்த்தன கலந்து கொண்டு பயனாளிகளுக்கான இவ்வுதவியை வழங்கியுள்ளார். (6-2)

# சட்டவிரோத மின்சாரம் பெற்ற 472 பேர் கைது செய்யப்பட்டனர்

(கொழும்பு)

வவுனியாவில் நடத்தப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது சட்ட விரோதமாக மின்சாரத்தை பெற்றுக்கொண்ட 472 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அக்போபுர சிவன் குளம், அம்பலாங்கொடல்ல உட்பட பல பகுதிகளில் நேற்று முன்தினமும் நேற்றும் சுற்றி வளைப்புக்கள் மேற்கொண்டதாக இலங்கை மின்சார சபையின் விசாரணை அதிகாரி பி. ஆர். எதிரிசிங்க குறிப்பிட்டார் இவர்கள் பிரதான மின்கம்பிகளில் கொக்கிகளை மாற்றி மின்சாரம் பெற்றுக்கொண்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. கைதானவர்கள் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (6-4)







ஏழாலை வடக்கு கிழக்கு சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் திவ்யா முன்பள்ளி விளையாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. இதில் வினோத உடைப்போட்டியில் பங்குபற்றிய மாணவர்களையும் பிரதம விருந்தினராக்க கலந்துகொண்ட ஏழாலை சைவ மகாஜனா வித்தியாசாலை அதிபர் ந.சுப்பிரமணியம் உரையாற்றுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஏழாலை உபதபால்அதிபர் திருமதி ஜி.மாலதி பரிசில்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# நினைவாலயத்தை சூழவுள்ள பற்றைகளை அகற்றக்கோரிக்கை

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நான்காவது உலக தமிழர் ஆராய்ச்சி மாநாட்டில் உயிரினைக் கொடையாகக் கொடுத்தவர்களுக்கான நினைவாலயமானது பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றது.

அண்மையில் இவ் நினைவாலயத்தை அண்டிய கோட்டைப் பகுதிகளில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் நினைவாலயத்திற்கான துப்பரவு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்நினைவாயலம் முன்பாகவே யாழ். வீரசிங்க மண்டபம் அமைந்துள்ளது. அங்கு பல நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றமையால் இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ள வருபவர்கள் வாகன தரிப்பிட வசதிகள் ஏதுமின்றி வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாக வாகனங்களை நிறுத்தி விட்டுச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

நினைவாலயத்தைச் சூழவுள்ள பற்றைகளை அகற்றுவதன் மூலம் இவ்வாகனங்களை நிறுத்துவதற்கான வாகன தரிப்பு வசதியினை மேற்கொள்ளலாம்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (6-2-51)

# யெகோவாவின் சாட்சிகள் மாவட்ட மாநாடு

(யாழ்ப்பாணம்)

யெகோவாவின் சாட்சிகளுடைய யெகோவாவிடம் நெருங்கி வாருங்கள் என்னும் தலைப்பிலான மூன்று நாள் மாவட்ட மாநாடு எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் காலை 9.20 முதல் பிற்பகல் 4.55 மணி வரையும் 29 ஆம் திகதி காலை 9.20 முதல் பிற்பகல் 3.40 மணி வரையும் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (6-4)

# நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் முருகன் உற்சவகாலத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் பதினொராம் நாளான இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை யசோதரன் நவரூபன், யசோதரன் காண்டீபன் (சக்ஸபோன்), திருமதி கிருஸ்ணாலினி அகிலன்(வயலின்), ஆர்.ஆனந்தகணேசன் (தவில்), எஸ்.செந்தூரன் (முகர்சிங்) ஆகியோர் வழங்கும் சக்ஸபோன் கச்சேரி இடம் பெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடைபெற்று வரும் சமயச்சொற்பொழிவு மற்றும் கலைநிகழ்வுகளில் இன்று பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை '**ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது**' என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் நா. நவராஜ் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து சைவ வித்தியா விருத்திச் சங்கம், திருநெல்வேலி தவசிக்குளம் கண்கையம்மன் ஆகிய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

✠ ✠ ✠

நல்லூர் சைவ மகாசபையினால் நல்லூர் மஹோற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன குரு மூர்த்த மண்டபத்தில் நடைபெற்று வரும் '***வில்லிபாரதம்***' பற்றி தெய்வீக தொடர் இசைப் பேருரையில் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு '***பீஷ்மர் சபதம்***' என்னும் விடயம் பற்றி பிரம்மஸ்ரீ சிவ வை.நித்தியானந்த சர்மா தொடர் இசைப் பேருரையை நிகழ்த்தவுள்ளார். (6-4)




# வடமராட்சியில் பலத்த மழை; விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலும் சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகின்றது.

இதில் நேற்று செவ்வாய்க்கிழமை வடமராட்சிப் பிரதேசத்தில இடிமின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்ததாக குறிப்பிடப் படுகிறது.

இதனால் சில இடங்களில் போக்குவரத்து தடைப்பட்டதாகவும் குறிப்பாக வடமராட்சியில் கடந்த நான்கு தினங்களாக மழை பெய்து வருவதாகவும் இத்தொடர் மழையால் மீனவர்களின் தொழில் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் வெங்காயச் செய்கை நிலங்கள் மழை வெள்ளத்தில் மூழ்கிப் போயுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனினும் இப்பலத்த மழை தொடருமாக இருந்தால் மக்களுடைய அன்றாட வாழ்க்கை பாதிப்படையும் அபாயம் உள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (6-4-10)

# விலைக்கட்டுப்பாடு குறித்த கலந்துரையாடல்

யாழ் நகர வர்த்தக நிறுவனங்கள் மீது அரச விலைக் கட்டுப்பாட்டாளர்கள் அண்மையில் மேற்கொண்ட நடவடிக்கை குறித்த கலந்துரையாடல் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் வேதானந்தா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட செயலத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் அரச விலைக் கட்டுப்பாட்டாளர்களால் தாம் எதிர்கொண்ட பிரச்சினைகள் தொடர்பாக யாழ் வர்த்தக சமூகத்தினர் அமைச்சரிடம் எடுத்து விளங்கினர்.

இருந்த போதிலும் அரச விலைக் கட்டுப்பாட்டுப் பிரதிநிதிகளும் தமது நிலைப் பாட்டினை எடுத்துரைத்தனர்.

இதனையடுத்து இருதரப்பு வாதப் பிரதிவாதங்களை செவிமடுத்த அமைச்சர் இந்த விடயம் குறித்து எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விரிவாக ஆராய இருப்பதாகவும் இதற்கு சகல தரப்பினரும் சமூகம் தர வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார். (6)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீட்டுக்கான பதிவுகள்

(திருநெல்வேலி)

வன்னியிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்போது பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் நாளை தொடக்கம் எதிர்வரும் 30ஆம் திகதி வரை மணியகாரன் சந்தியில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோர் அபிவிருத்தி அமைப்பில் இழப்பீட்டுக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு இடம்பெயர்ந்தோர் நலன் பேணும் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் கடந்த கால யுத்த நடவடிக்கையின் போது பாதிப்புக்குள்ளான வர்த்தகர்கள் மற்றும் வாகன உரிமையாளர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம்திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் மேற்குறித்த அலுவலகத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள். (6-2)

# செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்

(நல்லூர்)

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நூற்றாண்டு விழா செயற்குழு உறுப்பினர்களை தெரிவு செய்யும் நிகழ்வு கடந்த 22ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு மேற்படி கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக் குழுவின் தலைவராக அ. ஈஸ்வர நாதன், செயலாளராக ச.ஏகாம்பர நாதன்த பொருளாளராக செ.நாகரத்தினம், உபதலைவர்களாக வி.சோமநாதன் மற்றும் திருமதி கமலவேணி விஜயகுமார், உபசெயலாளராக த.செல்லத்துரை உட்பட 24பேர் கொண்ட செயற்குழுவும் இதில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (6-2-134)

# பருத்தித்துறை நகரசபையினால் பாலங்கள் அமைக்கப்படவுள்ளன

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நீதிமன்ற வீதியை பாதுகாக்கும் நோக்கில் இரண்டு பாலங்கள் பருத்தித்துறை நகர சபையினால் அமைக்கப்படவுள்ளன.

இவ்வீதியை பாதிக்காத வகையில் வெள்ளம் வழிந்தோடக்கூடிய முறையில் இவ்விரு பாலங்கள் அமையவுள்ளன.

மேற்குறித்த வேலைத்திட்டமானது எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் இவ்வேலையை பருத்தித்துறை நகரசபை செயலாளர் அ.நடராஜா மேற்கொண்டுள்ளார்.

பருத்தித்துறை நீதிமன்ற வீதியானது அண்மையில் செப்பனிடப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (6-2-10)

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பலாத்காரம் கூடாது என்பது கருத்தல்ல. தீமைக்கு அடிபணிவதா என்ற நிலை ஏற்படும்போது பலாத்காரத்தைப் பிரயோகிப்பது சிறந்தது. – டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அரிசிக்கு உமிதரும் அரச கலாசாரம்

இலங்கைத் திருநாட்டில் தமிழர்களின் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் என்ன தான் நடக்கின்றது என்பதை உணரமுடியாத நிலையில் தமிழ் மக்கள் உள்ளனர். விடுதலைப் போராட்டம் நடைபெற்றது உண்மை.

அந்தப் போராட்டம் போர் மூலம் முறியடிக்கப்பட்டமை உண்மை. தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை யுத்தத்தின் மூலம் அரசு தோற்கடித்து விட்டமைக்காக தமிழர்கள் இந்த நாட்டின் உரித்தாளர்கள் அல்ல என நினைப்பது மகாதவறு.

தமிழர்கள் தங்களின் விடுதலைக்காக இன்னுமொரு ஆயுதப்போராட்டத்தை ஆரம்பிக்கக் கூடாது என்பதை மட்டுமே மையமாகக் கொண்டு அரசு செயற்படுகின்றது.

இதற்காக எத்தகைய நடவடிக்கைகளை கையாண்டாலும் அது தவறல்ல என்ற நினைப்பில் அரசின் செயற்பாடு அமைந்துள்ளது.

தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் என்பது சடுதியாக ஏற்பட்டதன்று.

அகிம்சைப் போராட்டம் –பேச்சுவார்த்தை – ஒப்பந்தங்கள் என்ற பாதையின் வழியில் பயணித்த வேளையில்,

ஆளும் அரசுகள் ஏமாற்றிவிட்ட துயரத்தின் மையப்புள்ளியில் இருந்தே ஆயுதப் போராட்டம் உருவெடுத்ததெனலாம்.

இதனைக்கூட, ஆரம்ப கட்டத்தில் பொருத்தமான அணுகுமுறைமூலம் நிவர்த்தித்திருக்க முடியும். இது விடயத்திலும் அரசு தவறிவிட்டது. இப்போது உலகமயமாதலின் நன்மைகளும் , ஆயுதப்போராட்டங்களுக்கு உலகளவில் ஏற்பட்ட எதிர்ப்பும், எங்கள்மீது இந்தியா கொண்ட பகைமையும் இலங்கை அரசின் யுத்த வெற்றிக்கு சந்தர்ப்பம் கொடுத்தன.

ஆயுதப்போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, பேச்சுவார்த்தை, வடக்கு கிழக்கு மாகாண இணைப்பு, சுயாட்சி என்றெல்லாம் முன்மொழிந்த அரசு யுத்தத்திற்குப் பின் அவை பற்றி எதுவுமே சிந்தியாமல் நடப்பது வேதனைக்குரியது.

உண்மையில் இந்த நாட்டில் யுத்தத்திற்குப் பின்பேனும் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமென யாரேனும் நினைப்பார்களாயின், அந்த நினைப்பின் நடவடிக்கை இனப்பிரச்சினைக்குப் பொருத்தமான தீர்வை அமுல்படுத்துவதே ஒரே வழியாக இருக்கும்.

இதைவிடுத்து தமிழ்மக்கள் மீண்டுமொரு தடவை ஆயுதப்போராட்டத்தை முன்னெடுப்பதை தடுப்பதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு, தமிழ் மக்களின் காணிகளை அரச உடைமையாக்குதல், சிங்களக் குடியேற்றம், இராணுவக் குடியிருப்பு என்றவகையில் திட்டங்களைத் தீட்டி செயற்படுமாக இருந்தால்,

இலங்கைத் தீவின் எதிர்காலமும் குழப்பம் மிகுந்ததாக–அமைதிக்கு ஏங்குவதாக இருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

ஆக போருக்குப் பின் தமிழ் மக்களின் மனங்களை வெல்லது குறித்து அரசு சிந்திக்காமல் தமிழர்களின் மனங்களை நிந்திக்குமாயின் அதனை அரிசிக்குப் பதிலாக உமி கொடுத்த அவலமாகவே தமிழ்மக்கள் கருதுவர். அத்தகைய கருத்துநிலை ஆரோக்கியமானதல்ல.

# ஐயாயிரம் இலங்கையர்களுக்கு கொரியாவில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

கொரியாவில் வேலைவாய்ப்புப்பெற இலங்கையிலிருந்து ஐயாயிரம் பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொரியா வேலைவாய்ப்புக்காக நாடு முழுவதுமிருந்து 29 ஆயிரத்து 732 பேரின் விண்ணப்பங்கள் தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

கொரியாவில் பணியாற்றுவதற்காக கடந்த 3 நாட்களில் நாடு முழுவதிலுமிருந்து பல மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டு விண்ணப்பங்கள் சேகரிக்கப்பட்டன. இதன் அடிப்படையில் கடந்த வருடத்தை விடவும் இவ்வருடம் அதிகமானோர் கொரியாவில் பணியாற்ற விண்ணப்பித்துள்ளனர்.

கொரிய மொழியிலான பரீட்சையை எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் நடத்தவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு நடத்தப்படும் பரீட்சையிலிருந்து ஐந்தாயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டு கொரியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் எனப் பணியகம் குறிப்பிட்டுள்ளது. (ச–5)

# எம்.சீ.சன்.சியில் சென்ற தமிழர்கள் சிறையில் தடுத்து வைக்கப்படுவார்கள்

## கனடா அரசு அறிவிப்பு

(கொழும்பு)

அண்மையில் எம்.சீ.சன்.சி என்ற கப்பலின் ஊடாக கனடாவில் தஞ்சம் கோரிய தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்கள் சிறையில் தடுத்து வைக்கப்படுவார்கள் என அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

11 தினங்களுக்கு முன்னர் குறித்த கப்பல் பயணிகள் கனடாவின் வன்கூவர் கரையை சென்றடைந்தது.

புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பான விசாரணை நடத்துவதற்கு கூடுதலான கால அவகாசம் தேவை என்ற அரசாங்கத்தின் கோரிக்கையை கனேடிய குடிவரவு மற்றும் புகலிடத் திணைக்களம் ஏற்றுக் கொண்டுள்ளது.

கனடாவில் தடைசெய்யப்பட்டுள்ள அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய நபர்கள் குறித்த கப்பலில் பயணம் செய்துள்ளார்களா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் இந்த சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் குழுவில் 49 சிறுவர் சிறுமியரும் அடங்குவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

குறித்த சிறுவர் சிறுமியர் தாயுடன் சிறையில் தடுத்து வைக்கப்படுவர் அல்லது பராமரிப்பு நிலையங்களில் தடுத்து வைக்கப்படுவர் என கனேடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

90 நாட்களில் கடல் வழியாக பயணத்தின் பின்னர் குறித்த சட்டவிரோதப் புகலிடக் கோரிக்கையாளர்கள் கனேடிய கரையை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஒரு வருடத்திற்குள் கனடாவில் சரணாகதி அடைந்த இரண்டாவது புகலிடக் கோரிக்கையாளர்கள் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச–5)

# அவுஸ்ரேலியாவில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இருவர் மேன்முறையீடு

அவுஸ்ரேலியாவில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இரண்டு இலங்கைத் தமிழர்கள் மேன்முறையீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது புகலிடக் கோரிக்கை நியாயமற்ற வகையில் நிராகரிக்கப்பட்டுள்ளதாக குறித்த இலங்கைத் தமிழர்கள் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். 2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் படகு மூலம் கிறிஸ்மஸ் தீவை அடைந்த குறித்த இரண்டு இலங்கைத் தமிழர்களையும் அந்நாட்டு அதிகாரிகள் தடுத்து வைத்து விசாரணை நடத்தி வந்தனர்.

குடிவரவு அமைச்சர் தமது கோரிக்கையை உரியமுறையில் ஆய்வுசெய்யத் தவறியதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இலங்கைக்கு மீளவும் செல்ல முடியாத நிலைமை காணப்படுவதாகவும் அரசாங்க ஆதரவு தரப்பினால் தமக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 4 ஆயிரம் புகலிடக் கோரிக்கையாளர்கள் இந்த ஆண்டில்அவுஸ்ரேலியாவில் தஞ்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

# சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட்ட தண்டனை அதிர்ச்சியளிக்கிறது

## மல்வத்த பீடாதிபதி கவலை

(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவிற்கு முதலாவது இராணுவ நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தண்டனை அதிர்ச்சியளிக்கும் வகையில் அமையப் பெற்றதாக மல்வத்த பீடாதிபதி திப்பட்டுவாவே சுமங்கல தேரர், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவிடம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து மல்வத்த பீடாதிபதியிடம் கரு ஜயசூரிய அண்மையில் விளக்கமளித்துள்ளார். சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட்ட தண்டனை தொடர்பில் மகாநாயக்கத் தேரர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

பத்துக்கும் மேற்பட்ட செய்தி ஆசிரியர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் இந்த சம்பவங்கள் குறித்து இதுவரையில் விசாரணைகள் நடத்தப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் சட்டம் இரண்டு விதமாக அமுல்படுத்தப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் செய்தால் அது பிழை, அதனையே ஆளும் கட்சி உறுப்பினர்கள் செய்தால் அது சரி என்ற நிலைப்பாடே நாட்டில் காணப்படுகிறது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்களது கடமைகளை உரியமுறையில் மேற்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. சகல துறைகளிலும் இன்று அரசியல் தலையீடு காணப்படுகிறது. இதன் காரணமாகவே 17 ஆவது திருத்தச் சட்டமூலம் அமுல்படுத்தப்பட வேண்டுமென தமது கட்சி வலியுறுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச–5)

## சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



நீங்கள் எல்லையற்றவர் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். பயம் மடிந்து விடும். நானும் என் தந்தையும் ஒன்றே என்று எப்போதும் சொல்லுங்கள்.

எப்பொழுது நாம் நமது முழு மனதையும் இறைவனிடம் ஒப்படைத்து விடுகிறோமோ, எப்போது இறைவனிடம் மட்டுமே நாம் சரண் அடைகிறோமோ, அப்போது தான் பக்தியைப் பெற நாம் தகுதியுடையவர்கள் ஆவோம்.

எண்ணங்கள் அனைத்தும், பேச்சு அனைத்தும், சொல் அனைத்தும் இறைவனிடம் ஒப்படைக்கப்படுமாயின், இமைப்பொழுதேனும் இறைவனை மறந்திருப்பது பெரும் துன்பத்தைக் கொடுக்குமாயின், அப்போது தான் பக்தியின் தொடக்கம் உள்ளது எனலாம்.

# இலங்கையிலுள்ள வங்கிகளில் புலிகளின் சொத்துக்கள் இருந்திருக்குமேயானால் அரசுடமையாக்கப்பட்டிருக்கும்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

குமரன் பத்மநாதன் வசமுள்ள சொத்துக்கள் இலங்கையில் இருந்திருக்குமானால் அவை அனைத்தும் அரசுடமையாக்கப்பட்டிருக்கும். புலிகளின் பெரும்பாலான சொத்துக்கள் வெளிநாடுகளில் உள்ளன. இவை தொடர்பில் சர்வதேச சட்டங்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படவேண்டியுள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை வரலாற்றில் முதன் முதலாக இந்தியா 15ஆயிரம் கோடி ரூபாயை உதவியாக வழங்கியுள்ளமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ராஜதந்திர நட்புறவுக்கு கிடைத்த வெற்றியாகும் என்றும் அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு அமைச்சின் திறமையான நடவடிக்கைகள் காரணமாக குமரன் பத்மநாதனை கைது செய்ய முடிந்தது. இவரை அரசாங்கம் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. இதனை ஐக்கிய தேசியக்கட்சி தெரிவு செய்யவில்லை. அரசாங்கமே செய்தது.

விடுதலைப்புலிகளின் சர்வதேச முன்னாள் தலைவரான குமரன் பத்மநாதனிடமே புலிகளின் பணம் உட்பட சொத்துக்கள் இருக்கின்றன. எனவே இவை தொடர்பாக கே.பியிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பெரும்பாலான சொத்துக்கள் வெளிநாட்டு வங்கிகளிலேயே உள்ளன.

எனவே இவை தொடர்பில் சர்வதேச சட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஐ.தே.கட்சி கூறுவது போன்று தன்னிச்சையாக செயற்பட முடியாது. இச்சொத்துக்கள் இலங்கை வங்கிகளில் இருந்திருக்குமானால் அனைத்தும் அரசுடமையாக்கப்பட்டிருக்கும்.

எனவே சர்வதேச சட்டங்களுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சரியான தருணத்தில் சரியான தீர்மானங்களை அரசாங்கம் மேற்கொள்ளும். முன்னாள் பயங்கரவாத சர்வதேச செயற்பாட்டாளரான இவரை சுதந்திரமாக நடமாடவிடவில்லை. அரசாங்கக் காவலிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவ் விசாரணைகள் அனைத்தும் இரகசியமாக நடத்தப்பட்டு வருகின்றன. அரசாங்க இரகசியங்களை வெளியிடுவது தவறாகும். ஆனாலும் அரசாங்கம் அனைத்திலும் வெளிப்படைத்தன்மையாக செயற்படுகின்றது. (6-2)

## இயக்குநர் சீமானை சிறையில் சந்தித்தார் தயாரிப்பாளர் தாணு

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவரை விடுதலை செய்யக்கோரி பல்வேறு அமைப்பினரும் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் நேற்று பிரபல தயாரிப்பாளர் கலைப்புலி தாணு வேலூர் சிறைக்கு சென்று சீமானை சந்தித்துப் பேசிவிட்டு வந்தார்.

கலைப்புலி தாணு தயாரிப்பில் விஜய் நடிக்கும் படத்தை சீமான் இயக்குவதாக பேச்சு இருந்தது. இதற்கான கதை விவாதமும் நடந்து வந்ததாக கூறப்பட்டது.

இந்த சூழ்நிலையில் இலங்கைக்கு கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதை கண்டித்து சென்னையில் சீமான் ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்திய இறையாண்மைக்கு எதிராக சீமான் பேசியதாக குற்றம்சாட்டப்பட்டு தேசிய பாதுகாப்பு சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் தாணு சந்தித்ததால் திரைப்படம் சம்பந்தமாக இந்த சந்திப்பு நடந்தது என்று பேசப்படுகிறது. (6)

## ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான அழகியல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோட்டத்தைச் சேர்ந்த ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான அழகியல் செயலமர்வு நாளையும் நாளை மறுதினமும் காலை 8 .30 மணிக்கு யாழ்.கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் மேற்படி ஆசிரியர்களை தவறாது சமூகமளிக்குமாறு யாழ். வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (6-4)

# இலங்கைக்கு செல்லும் தூதுக்குழுவில் தமிழக எம்.பி.க்கள் இடம்பெறுவார்களா?

## கருணாநிதி பதில்

முதல்வர் கருணாநிதி நேற்று செய்தியாளர்களை சந்தித்த போது செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கும் அதற்கு முதல்வர் அளித்த பதில்களும் வருமாறு;

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவுக்கு கொடுத்த வாக்குறுதிகளையும் சர்வதேச நாடுகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளையும் ஐ.நா சபைக்குக் கொடுத்த வாக்குறுதிகளையும் கூட இலங்கை அதிபர் நிறைவேற்றவில்லை என்று எல்லோரும் சொல்கிற சூழ்நிலையில் மத்திய வெளியுறவுத்துறை செயலாளர் நிருபமாராவ் உங்களை வந்து பார்த்தார்கள். அதன் தொடர்ச்சியாக ஏதாவது உறுதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

இதே கருத்தை நான் நிருபமா ராவ் அவர்கள் என்னைச் சந்தித்த போது அவர்களிடம் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன்.

அவர்களும் அதை மத்தியிலே உள்ளவர்களிடம் தெரிவித்து நான் கேட்டுக் கொண்டுள்ளவாறு அங்குள்ள நிலைவரங்களை அறியவும் இலங்கை அரசு வழங்கியுள்ள வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ளவும் முயற்சிகளை மேற்கொள்வதாக உறுதியளித்திருக்கிறார்கள்.

அதற்கான தூதுக் குழு ஒன்று அல்லது தூதுவர் ஒருவர் விரைவில் அனுப்பப்படுவார் என்பதை என்னிடத்திலே உறுதியாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

அந்தத் தூதுக்குழுவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராவது இடம்பெறுவார்களா?

இல்லை. சில கட்சிகள் தூதுவரை அனுப்புவதை விட அனைத் துக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு சில கட்சிகள் தூதுவரை அனுப்புவதே தேவையற்ற ஒன்று என்று சொல்லியிருக்கிறார்கள் என்று தெரிவித்தார். (6-2)

# கீரை, வெள்ளைப் பூண்டு உடல் பருமனை குறைக்கும்

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

உடல் பருமனைக் குறைக்க உணவுக் கட்டுப்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் மூலம் இரத்தத்தில் சக்கரை அளவை கட்டுப்படுத்தி உடலை கச்சிதமாக வைத்துக்கொள்ள படாத பாடுபடுகின்றனர். இவற்றையெல்லாம் விட தங்களது அன்றாட உணவில் கீரை வகைகளை மற்றும் வெள்ளைப்பூண்டை பயன்படுத்தினாலே போதும். உடல்பருமன் ஏற்படாமல் தடுக்க முடியும் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

இவை உணவுப்பொருட்களின் உள்ள காபோவைதரேற்று ரேட்ஸ் என்னும் மாவுப் பொருட்களை இரசாயனமாற்றங்கள் மூலம் நொதிக்கச் செய்கிறது.

இதன் மூலம் இரத்தத்தில் சக்கரை அளவு குறைந்து உடலின் போதுமான அளவு இன்சுலின் ஹோர்மோன்கள் சுரக்கச் செய்கின்றன.

இதன் மூலம் குளுக்கோஸ் அளவு சீராகி உடல் பருமன் மற்றும் பல நோய்கள் ஏற்படாமல் தடுக்கப்படுகிறது என்றும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். (6)

# மிருகபலிக்கு எதிராக சத்தியாக்கிரக போராட்டம்

(கொழும்பு)

மிருகங்களைப் பலி கொடுப்பதை தடுப்பதற்காக சத்தியாக் கிரக போராட்டம் நடத்தப்படவுள்ளதாக பௌத்த பிக்குகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சிலாபம், முன்னேஸ்வரம் ஆலயத்தின் கிளையான காளி கோயிலில் வருடாந்தம் மிருகங்கள் பலி கொடுக்கப்பட்டு பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய தினம் இந்தப் பூஜை வழிபாடுகள் நடத்தப்படவுள்ளதகவும் இதனைத் தடுத்து நிறுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்காவிட்டால் சத்தியாகக் கிரக போராட்டம் நடத்தப்படும் எனவும் தேசிய சங்க சம்மேளனத்தின் புத்தளம் மாவட்ட பிரதம அமைப்பாளர் பாண்டிருப்புவே வினித தேரர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மிருகவதை தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இந்த விடயம் குறித்து சட்ட ரீதியாக எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் என ஆராயப்பட்டு வருவதாகவும் பொலிஸ் அத்தியட்சகர் சீ.ஈ.வெடிசிங்க தெரிவித்துள்ளார்.

300 ஆடுகளும் பெருந்தொகையான கோழிகளும் இன்றைய தினம் காளி கோயிலில் பலி கொடுப்படவுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (6-2)

1ம் ஆண்டு நினைவஞ்சலி





இரு ஆலமரம் போல் இருந்த எமக்கு
வழிகளைக் காட்டினீர்களே
அங்கே ஆலம் விழுதுகளாய்
நாங்கள் இருந்தோமே
வேருடன் ஒரு ஆலமரம் சாய
விரைவாய் மற்றதும் சாய்ந்ததுவோ
அதைப்போல உலகை விட்டு நாமும்
எம்மை விட்டு நீங்களும்
வெகுதூரம் சென்றுவிட்டீரே
சென்ற தூரம் அறியாமல்
ஓராண்டும் சென்றதுவோ
ஆயினும் உம் நினைவுகள்
அன்றும் இன்றும் என்றும்
எம்முள்ளே இருந்து கொண்டே
உள்ளதுவே.

1/1, அம்மன் வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர்.

உங்கள் நினைவுகள் வாழும்
நினைத்திருக்கும் குடும்பத்தினர்.

# வாழ்வா? சாவா? போட்டியில் இன்று இந்திய-நியூசிலாந்து பலப் பரீட்சை

(தம்புள்ள)

முத்தரப்பு ஒருநாள் தொடரில் இன்று நடைபெறும் ஆறாவதும் இறுதியுமான லீக் போட்டியில் இந்திய, நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

இப் போட்டியில் வெற்றி பெறும் அணி தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறும். இலங்கை, இந்திய, நியூசிலாந்து அணிகள் மோதும் முத்தரப்பு ஒரு நாள் தொடர் தம்புள் ளயில் நடைபெற்று வருகின்றது.

இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணி களுடன் இரண்டுமுறைமோத வேண்டும். புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும்.

இதுவ்ரை 5 லீக் ஆட்டம் முடிந்து விட்டது. ஆறாவது மற்றும் கடைசி லீக் ஆட்டம் இன்று நடக்கின்றது. இதில் இந்திய, நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

இலங்கை அணி 4 ஆட்டத்தில் 2 வெற்றி, ஒரு தோல்வியுடன் 11 புள்ளிகள் பெற்று இறு திப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

நியூசிலாந்து அணி 3 ஆட்டத்தில் ஒரு வெற்றி, ஒரு தோல்வியுடன் 7 புள்ளிகளை யும் இந்தியா மூன்று ஆட்டத்தில் ஒரு வெற்றி, 2 தோல்வியுடன் 5 புள்ளிகளையும் பெற் றுள்ளன.

இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும். இந்திய அணி ஏற்கனவே நியூசிலாந் திடம் மிகவும் மோசமாக 200 ஓட்டங்கள் வித் தியாசத்தில் தோல்வியடைந்தது.


அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய வீரர்கள் சிறப்பாக விளையாட வேண் டிய நிலையில் உள்ளனர்.

இலங்கைக்கு எதிரான இரண்டாவது ஆட் டத்தில் இந்திய வீரர்களின் துடுப்பாட்டம் மிக வும் கவலையளிக்கும் வகையில் இருந்தது.

சேவாக்கை மட்டுமே அதிகமாக நம்ப வேண்டியுள்ளது. அவர் அதிரடியாக ஆடி னால் மட்டுமே ஓட்டங்கள் குவிக்க முடிகிறது. நடுத்தர வரிசை மிகவும் மோசமாக உள்ளது.

றோகித் சர்மா, ரவீந்திர ஜடேஜா ஆகியோ ரின் துடுப்பாட்டம் மோசமாகவுள்ளது. விராட் கோலி ஒரு போட்டியில் மட்டுமே விளையாடி னார்.ஆனால் முத்திரை பதிக்கத் தவறிவிட் டார்.

பந்து வீச்சு சிறப்பாக இருக்கும். துடுப் பாட்டம் தான் மோசமாகவுள்ளது. இன்றைய ஆட்டத்தில் அதைச் சரி செய்தால்தான் இந் திய அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற முடியும்.




நியூசிலாந்து அணி துடுப்பாட்டம், பந்து வீச்சில் சம பலத்துடன் காணப்படுகின்றது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் றோஸ் ரெய்லர், ஸ்டைரிஸ், குப்தில் நல்ல நிலை யில் உள்ளனர்.


தம்புள்ள ஆடுகளம் ஒரு நாள் போட்டிக்கு ஏற்ற வகையில் இல்லை. எந்த அணியாலும் மிகப் பெரிய ஓட்ட எண்ணிக்கையை எட்ட முடியவில்லை.

இந்திய அணி இரண்டு போட்டியில் மிக வும் மோசமாக ஆடியது. அத்தோடு இலங் கைக்கு எதிரான ஆட்டத்தில் நடுவரும் பாதக மாக இருந்ததால் மேலும் பாதிப்பு ஏற்பட்டது.

இன்றைய ஆட்டம் பிற்பகல் 2.30 மணி க்கு ஆரம்பமாகின்றது.

**83-வது முறையாக இன்று மோதல்**

இரு அணிகளும் இன்று மோதுவது 83-வது ஒருநாள் போட்டியாகும். இதுவரை நடந்த 82 போட்டிகளில் இந்தியா 40 ஆட்டத்திலும் நியூசிலாந்து 37 ஆட்டத்திலும் வெற்றி பெற் றுள்ளன. 5 ஆட்டம் முடிபில்லை.



அமெரிக்காவின் ஒகியோ நகரில் சின்சினாட்டி மாஸ்டாஸ் டென்னிஸ் தொடர் நடந் தது. இதன் இறுதிப் போட்டியில் அமெரிக்க வீரர் மார்டி பிஷ்சை வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தை வென்ற மகிழ்ச்சியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர்.

## விஸ்வநாதன் ஆனந்த் இந்தியரா? கலாநிதிப் பட்டம் வழங்க மறுப்பு

(சென்னை)

சர்வதேச செஸ் விளையாட்டில் முதலிடம் பிடித்த தமிழகத்தைச் சேர்ந்த வீரர் விஸ்வ நாதன் ஆனந்துக்கு அறிவிக்கப்பட்ட கலா நிதிப் பட்டம் குறித்து பெரும் சர்ச்சை எழுந் துள்ளது.

சென்னையைச் சேர்ந்தவர் விஸ்வநாதன் ஆனந்த். ஐந்து முறை உலக சம்பியனாக



இடம்பிடித்துள்ளார். இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டர் என்ற பெருமைக்குரியவர்.

உலகத் தரப் பட்டியலில் எப்போதும் முத லிடம் பிடித்து வரும் வீரர் இந்தியரா?என்ற புதிய பிரச்சினை தற்போது.

ஐதராபாத் பல்கலைக்கழகத்தில் சர்வதேச கணிதவியல் பேராசிரியர் மன்றம்சார்பில் நிகழ்ச்சி நேற்றுக் காலையில் நடக்கவிருந் தது.

இந்த விழாவில் ஆனந்துக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்படவிருப்பதாகப் பல்கலைக்கழகம் அறிவித்திருந்தது. இதற் கென ஆனந்தும் அவரது மனைவியும் ஐத ராபாத் புறப்பட்டுச் சென்றனர்.

இந் நிலையில் அவருக்கு கலாநிதிப் பட் டம் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தாகப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. இதில் ஆனந்த் ஸ்பெயின் நாட்டின் குடியுரி மை பெற்றிருப்பதால் இவருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்குவதில் எதுவும் சட்டச் சிக்கல் இருக்கிறதா? எனச் சந்தேகம் எழுந்திருப்ப தாகக் கூறப்பட்டுள்ளது.

இதனை மனித வள அமைச்சகம் எழுப்பி தாகவும் தெரிவிகிறது. இதனால் பல்கலைக் கழகத்தினால் குழப்பமடைந்ததாகத் தெரி கிறது.

இதனால் வெறுப்படைந்த ஆனந்த் நான் இந்தப் பட்டத்தை வாங்கப் போவதில்லை. எனக்கு வேண்டாம் எனக் கூறியுள்ளார்.

# இந்திய அணிக்கு எதிரான சார்ஜா வெற்றிதான் சிறந்தது

## இலங்கை அணித் தலைவர் சங்கக்கார தெரிவிப்பு

(தம்புள்ள)

முத்தரப்புத் தொடரில் வென்றதைவிட சார்ஜாவில் இந்தியாவுக்கு எதிராகப் பெற்ற வெற்றிதான் சிறந்தது என இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித் துள்ளார்.

இலங்கையில் முத்தரப்புக் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இந்திய அணி இலங்கையிடம் எட்டு விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியடைந் தது.

மிகப் பெரியளவிலான இந்த வெற்றிக்கு இலங்கை அணித் தலைவர் சங்கக்கார 2-வது இடந்தான் கொடுத்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது,

இந்திய அணிக்கு எதிரான மிகப் பெரிய வெற்றி என்றால் அது சார்ஜாவில் பெற்றது தான். கடந்த 2000 ஆம் ஆண்டு ஒக்டோப ரில் நடந்த அந்தப் போட்டியில் இந்திய அணிக்கு 300 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயித் திருந்தோம்.

ஆனால் 54 ஓட்டங்களுக்கு சகல விக் கெட்டுக்களையுமிழந்து இந்திய அணி படு தோல்வியடைந்தது. மிகப் பெரிய அணிக்கு எதிராக பெற்ற இந்த மிகப் பெரிய வெற்றி தான் சிறந்தது.

வெற்றி முக்கியம்

எனது கிரிக்கெட் வாழ்க்கையின்ஆரம்பத் தல் பெற்ற இந்த வெற்றி மறக்க முடியாது. அணியின் முன்னணி வீரர்கள் ஓய்வு பெற்ற நிலையில் கடந்த வியாழக்கிழமை கிடைத்த வெற்றி எங்கள் தன்னம்பிக்கையை அதி கரித்துள்ளது.

இருப்பினும் போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெறுவதுதான் முக்கியம்.

ரெபரல் தேவை

இந்திய வீரர்களுக்கு எதிராக தவறான ஆட்டமிழப்பு கொடுக்கப்பட்டதுபோன்று நடந்து விடக் கூடாது என்றுதான் இந்தத் தொடர் முழுவதும் அம்பயர் ரெபரல் முறை வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண் டோம்.

ஆனால் இந்திய அணியினர் வேண்டாம் என மறுத்தனர். இல்லையெனில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியிருக்க லாம்.



சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அனை த்துப் போட்டிகளிலும் கட்டாயமாக அம்பயர் ரெபரல் முறை கொண்டு வர வேண்டும். இவ் வாறு சங்கக்கார தெரிவித்தார்.

# கண் பார்வையற்ற மாணவர்கள் கிழக்கில் கல்வி கற்பதில் சிரமம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் கண் பார்வையற்றவர்களுக்கான ஒரே ஒரு விசேட கல்விப் பிரிவு மாத்திரமே இருப்பதால், கண் பார்வை குறைந்த தமிழ், முஸ்லிம் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின் றனர்.

2 ஆயிரத்து 62 மாணவர்கள் கிழக்கு மாகாணத்தில் கண் பார்வையற்றவர்களாக இருக்கின்றனர். இவர்களுக்காக 175 கல்விப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் 174 கல்விப் பிரிவுகள் சிங்கள மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் மாணவர்கள் எதிர்நோக்கும் போக்கு வரத்து பிரச்சினைகள் காரணமாக பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மாணவர்கள் சிங்கள மொழி மூல கல்விப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிங்கள மொழி புரியாத நிலையில் ,இந்த தமிழ் பேசும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (ச-5)

# மனிதாபிமானமுடைய சர்வாதிகாரியாக ஜனாதிபதி நாட்டை ஆட்சி செய்யவேண்டும்

## இனாமலுவே தேரர் வலியுறுத்தல்

(கொழும்பு)

எதிர்வரும் ஆறு ஆண்டு காலத்திற்கு மனிதாபிமான முடைய சர்வாதிகாரியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டை ஆட்சி செய்ய வேண்டுமென இனாமலுவே சுமங்கல தேரர் வலியுறுத்தியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்திற்கு அப்பாலான சர்வாதிகார ஆட்சி முறைமையொன்று நாட்டுக்கு அவசியப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன் தினம் தம்புள்ள விஹாரைக்கு சென்றிருந்த வேளையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லக் கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே.

தற்போது நாட்டில் நிலவிவரும் ஜனநாயக சுதந்திரம் பொருத்தமற்றது.லீ க்வான் யூ சிங்கப்பூரை அபிவிருத்தி செய்ததனைப் போன்றதொரு சர்வாதிகாரியினால் மட்டுமே நாட்டடை அபிவிருத்தி செய்ய முடியும்.

ஆகவே,எதிர்வரும் ஆறு ஆண்டு கால ஆட்சியை சர்வாதிகார ஆட்சியாக ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார், (ச-5)

# தமிழக கேந்...

தமிழ் நாட்டில் உள்ள இந்திய கூட்டுப்படைத் தளத்தை குறிவைத்தே பொருத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

குறிப்பாக ஆவடியில் இயங்கும் கனரக ஆயுத உற்பத்தி தொழிற்சாலை, தமிழ் நாட்டில் உள்ள அணுமின் உலை உள்ளிட்ட பல கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்கள் கண்காணிக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

ஆசியக்கூற்றப்பில்தனதுஆளுமையை நிலைநிறுத்த முயலும் சீனாவிற்கும், இது ஒரு பின்னடைவாகவே கருதப்படுகிறது.

இந் நிலையில் அதி நவீன ராடர் கருவிகளை அமெரிக்க வழங்கியுள்ள போதும், அது எவ்வாறான தகவல்களை மேலதிகமா கச்சேகரித்து, செய்ம்மதியூடாக அனுப்பும் என்பது போன்ற மிக நுணுக்கமான விடயங்கள் தொடர்பாக மிகுந்த சந்தேகம் உள்ளது.

ஆகமொத்தத்தில் அமெரிக்கா, சீனா, இந் தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கை மீது எவ்வளவு கண் வைத்திருந்தார்கள் என்பது தற்போது கொஞ்சம் கொஞ்சமாக வெளிச்சத்துக்கு வருகின்றது. (ச-5)

# இரண்டாவது...

4ஆவது சாட்சியாளரான நிதியமைச்சின் அதிகாரியான ஐ.வீ.விமலதாச கடந்த சனிக்கிழமை சாட்சியமளித்துள்ளார். இதனை தவிர மூன்று இராணுவ அதிகாரிகள் சாட்சியமளித்தனர். 5ஆவது சாட்சியாளரான மேஜர் ஒருவரிடம் நேற்று சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

அதேவேளை சரத் பொன்சேகா சார்பில் சாட்சியங்கள் முன்வைக்கப்படும் என அறிவிக்கப்படவில்லை எனவும் இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார்.

தீர்ப்பு அறிவிக்கப்பட்ட முதலாவது இராணுவ நீதிமன்றம் சரத் பொன்சேகா சார்பிலான சாட்சியங்களை பதிவுசெய்யவில்லை. இராணுவத்தில் பணியாற்றிய காலத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை நடத்திய முதலாவது இராணுவ நீதிமன்றம் சரத் பொன்சேகாவின் பதவி நிலை விருதுகள் மற்றும் பதக்கங் களை பறிக்குமாறு தீர்ப்பளித்ததுடன் ஓய்வூதியத்தையும் இரத்துச்செய்யுமாறு பரிந்துரை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# மட்டு. மாநகர...

பினரைச் சந்தித்து உரையாடியிருக்கிறார். பின்னர் அங்கிருந்து இரவு 7 மணிக்கு தனது வீடு நோக்கிப் புறப்பட்ட இவர் பின்னர் வீடு சென்று சேரவில்லை என தெரியவருகிறது.

இவர் காணாமல் போயுள்ளமை காரணமாக மாநகர சபை உறுப்பினர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. காணாமல் போயுள்ளமை குறித்து மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

# ஐ.நாவுக்கான...

கொடியோடு சரணடைய வந்த புலி உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று கூறப்படும் சம்பவத்தில் இவருக்கும் சம்பந்தம் உண்டு என்று பரவலாகப் பேசப்படுகின்றது.

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா மேற்சொன்ன சம்பவத்தில் சவிந்திர சில்வாவுக்கு நெருக்கமான சம்பந்தம் உண்டு என்று குற்றஞ்சாட்டியுள்ளார். (ச-5)

# பிரபாகரனுக்கு எப்...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தீவில் போர் நிறுத்தம் ஏற்படாமல் போனதற்கு வைகோதான் காரணம் என, குமரன் பத்மநாதன் என் மீது குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

வைகோவின் தேர்தல் பேராசையால், விடுதலைப் புலிகள் பலியாக நேர்ந்தது என, ஆலகால விஷத்தைக்கக்கி இருக்கிறார்.

இப்படிக் கூறிய குமரன் பத்ம நாதன், 2002 ஆம் ஆண்டு இறுதியில் சர்வதேச பொறுப்பில் இருந்து பிரபாகரனால் நீக்கி வைக்கப்பட்டவர்.

தமிழ் ஈழ விடுதலைக் கோரிக்கையை புலிகள்கை விட்டால், விடுதலைப் புலிகளுக்கு நாங்கள் ஆதரவு தரமாட்டோம் என நடேசனிடம் நான் கூறிவிட்டதால் இந்தப் போர் நிறுத்த முயற்சி கை கூடாமல் போனதாகவும் பத்மநாதன் என்மீது பழி சுமத்தியுள்ளார்.

பத்மநாதன் கூறியது ஜமுக்காளத்தில் வடி கட்டிய அப்பட்டமான பொய். எவ்வகையிலாவது போர் நிறுத்தம் ஏற்பட்டு விடாதா என நாங்கள் துடித்தோம்.

பிரபாகரனுக்கும், புலிகள் அமைப்பிற்கும் எந்தக் காலத்திலும் நாங்கள் யோசனை கூறியது கிடையாது. ஆயுதங்களை கீழே போடவே ஒப்புக் கொள்ளாத பிரபாகரன், சிதம்பரத்தின் யோசனைப்படி ஆயுதங்களையும் கீழே போட்டு, சரணடைந்து தமிழ் ஈழத்தை கைவிட்டு விட கனவிலாவது உடன்படுவாரா? நான் இதில் எதிர்ப்புத் தெரிவித்து, அதனால் முயற்சி நின்று போனதாக அறிவுள்ள எவரும் ஏற்கமாட்டார்கள். இவ்வாறு வைகோ கூறியுள்ளார். (ச-5)

# பிரபாகரன் மறைந்திருந்த...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிரபாகரன் உயிரிழந்து விட்டதாகவும் இதனால் யுத்தம் முடிபடைந்து விட்டது என 2009ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி இராணுவத் தலைவர்கள் ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தனர்.

மே 16ஆம் திகதி அதிகாலை இராணுவப் பாதுகாப்பு அரண்களை உடைத்துக் கொண்டு செல்லும் நோக்கில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது, தீப்பற்றி எரிந்த அம்புலன்ஸ் வண்டியில் இருந்த சடலம் பிரபாகரனுடையது என படையினர் எண்ணியதே படையினர் யுத்தம் முடிபடைந்து விட்டதாக அறிவித்ததற்கு காரணமாகும் எனவும் அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் இந்த அறிவிப்பை நிராகரித்த கே.பி.17ஆம் திகதி பிரபாகரன் தன்னுடன் தொலைபேசியில் உரையாடியதாகவும் அவர் இன்னும் உயிருடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து உடனடியாக செயற்பட்ட புலனாய்வுத்துறையினர் அன்றை தினம் மேற்கொள்ளப்பட்ட செய்ம்மதி தொலைபேசி உரையாடல் குறித்து விசாரணை நடத்தியதுடன் பிரபாகரனின் தொலைபேசி இருந்த இடத்தை கண்டறிந்தனர்.

இதன்பின்னரே பிரபாககரன் மறைந்திருந்ததாகக் கூறப்படும் நந்திக்கடல் பகுதி மீது படையினர் தாக்குதல் நடத்தினர். செய்ம்மதி தொலைபேசி இருக்கும் இடத்தை கண்டறியும் தொழில்நுட்பம் அமெரிக் காவினால் இலங்கை இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டிருப்பதை விடுதலைப் புலிகள் அறிந்திருக்க வில்லை.கே.பி., பிரபாகரனுடன் தனக்கு தொலைபேசி தொடர்பிருப்பதாக காட்டி தலைமைத்துவப் பதவியை பெற முயற்சித்துள்ளதாக இராணுவத் தரப்பு தகவல்கள் தெரிவித்தன என அதில் தெரிவிக்கப்பட்டது. (ச-5)


நீங்கள் 16 வயதுக்கு மேற்பட்டவரா!
உயர் கல்வி? தொழில்? கவலையை விடுங்கள்.
நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
Free Courses BCS-UK, English, ICDL
(C-935)
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும்
MCS Supported By UNDP/JRRP
324, Palaly Road, Campus Junction, Jaffna.
Network Software Engineering
BIT CIMA CCNA SUNJAVA
Government Scholarship
Salary Scale more than 50,000$
www.payscale.com
Call 772395895

WANTED

Full time / Part time MBBS qualified Medical Officers to Green Memorial Hospital, Manipay.

Salary and accommodation will be negotiable. Apply before 31st of August,2010.

T.P No:- 021 7451935

Mr. S.R.Jesupalan J.P
*Secretary Mission Hospitals,*
*Green Memorial Hospital, Manipay.*
*&*
*McLeod Hospital, Inuvil.*

(2249)

STUDY IN CANADA &UK

இலங்கை மாணவர்கள் கண்டிராத கட்டணச் சலுகையில் Student Visa Process செய்து தரப்படும்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் ஒருவரினால் புதிய விசா நடைமுறைகளிற்கேற்ப அனுமதிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. 2010, 2011 இற்கான அனுமதிகள் தற்போது மேற்கொள்ளலாம்.

Sponsor வசதிகள் செய்து தரப்படும்.

SAI INSTITUTE OF COMPUTER STUDIES
COLOMBO & JAFFNA

Suren 0772479436
Ainkaran 0770723171



(2252)

Mr. Concrete

இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட தரத்திற்கு அமைய (SLSI) நவீன இயந்திரங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டவை.

ஹூமன் என்ரபிறைசஸ் பிறைவேட் லிமிட்டட், கொடிகாமம் வீதி, புலோலி.
கிளை 124,3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
0217222333 www.Mr.Concrete.lk

உங்கள் சகல கொங்கிறீட் தேவைகளுக்கும்
- கொங்கிறீட் கற்கள்
- ஓட்டைக் கற்கள்
- வேலித் தூண்கள்
- நிலத்துக்குப் பதிக்கும் கற்கள்

விநியோகம் இலவசம்



(C-936)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.